
# கடற்காற்று



கயிலாசநாதன்

150/2

150/2

# கடற்காற்று

நாவல்

314

K.S.B. Sundaram
03-07-02.

56

# கடற்காற்று

நாவல்

314

“அங்கையன்”
கயிலாசநாதன்

K. S. B. Sundaram.
03-07-02.

குணசேன

வரையறுக்கப்பட்ட எம். டீ. குணசேன அன் கம்பனி
217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
தொலைபேசி 323981-4 பக்ஸ் 323336 Email mdgunasena@mail.ewisl.net

© இராசலட்சுமி கயிலாசநாதன்

வெளியீடு 2000

ISBN - 955 - 21 - 1059 - 9

இந்தப் பிரசுரத்தின் எந்த ஒரு பகுதியையும், இதன் பதிப்பாளருடைய எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, மறுபிரசுரம் செய்யப்படவோ, எடுத்தாளப்படுவதற்கோ, சேகரம் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படவோ, மாற்றம் செய்யப்படவோ, எந்த வடிவத்திலும் அதாவது எலக்ரோனிக் கையெழுத்துப்பட்ட அச்சுவடிவாக்கங்களிலோ, பிரதியச்சு வடிவிலோ, ஒலிப்பதிவாக்கமாகவோ வெளியிடப்படுவதற்கு உரியதல்ல.

வரையறுக்கப்பட்ட எம்.டீ.குணசேன அன் கம்பனியினரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. R - P - 2034 - 5/2000

# என்னுரை

இந்த நாவல் என்னுடைய முதலாவது படைப்பன்று, கன்னி முயற்சியுமன்று. நான் எழுத வேண்டும் என்ற இனிய ஆவலைப் பெற்று 1959ம் ஆண்டு முதல் சவலைப் பிரசவம் செய்திருந்தும் பெயர் விளம்பரத்துக்காக மட்டுமே அதனையே உரைத் துணர்த்தும் தரமாகக் கருதி - கதைகளைப் படைத்தவர்களுடைய கதைகளை மட்டுமே கரம் நீட்டி அணைப்போம் என்ற கவைக்குதவாப் பத்திரிகைகளின் புறமுதுகைப் பார்த்துப் பெருமூச்சு விட்டதுடன் என் எழுத்தாசை ஒத்தாசையின்றி முடிவுற்றது.

பத்திரிகைகள் தாம் கதாசிரியனைத் தீர்மானிக்கின்றன என்ற பத்தாம் பசலிக் கனவை மறுத்த, உத்வேகம் உள்ள எவனும் எழுதலாமே என்ற உணர்வு பெற்று இந்த நாவலுக்கு முன்பு ஒரு முழு நாவலை எழுதி முடித்து, அதனை அழகாகப் படியெடுத்து, என் நூல் நிலையப் பெட்டிகளின் அடியிற் பக்குவமாக வைத்திருந்தேன். எனது ஓலை வீட்டில் நீக்கமற நிறைந்துள்ள கறையான்களுக்கு அக் கதைத்தாள்களுட் பெரும்பாலானவை இரையாகிவிட்ட சோகம் அண்மையில் தான் தெரியவந்தது.

ஓ! கறையானுக்குத் தமிழ் நூல்கள் என்றால் மிகவும் பிடிக்குமா?

இந்த நாவல் 1962ம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் நடாத்திய குறுநாவற் போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்ற அவசராவசரத்தில் ஆரம்பத்தில் எழுதப்பட்டு, பதக்கத்தையும் பெற்று விட்டு, "ஈழநாடு" வார மஞ்சரியில் வெளிவந்து இந்த நாட்டின் தரமான வாசகர்களின் நெஞ்சங்களில் தவழ்ந்து வந்தது.

தொடர்கதையாக வந்த இதனை வாசித்து விட்டு சில அன்பர்கள் என்னைப் பாராட்டினார்கள். நண்பர்கள் முகமலர்ந்து குறைகளையும் நிறைகளையும் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் குறைகளையும் நிறைகளையும் நிறுத்த விடத்துப் பின்னையதே பலமாக இருந்தது எனச் சிலர் கூறிப் பெருமைப்பட்டார்கள். எல்லோர்க்குந் திருப்தியை ஏற்படுத்த முனையும் ஒரு முயற்சியின் அறுவடையாகக் "கடற்காற்று" மெருகிடப்பட்டது.

அதுதான் இது!

இலங்கையில் நூல் வெளியிடுவது ஒரு பிள்ளைச் சீதனத்துக்குச் சமம். இந்நிலையில் இத்துறையில் உழைக்க எவரும் முன்வருவதில்லை. முன்வந்தவர்கள் மறுபடியுஞ் செய்வதில்லை. இதனால் கற்பனையாழமும், சமூகப் பிரச்சினைகளை இலக்கியக் கண்கொண்டு நோக்குந் திறமை, அழகான தமிழை அவ்வாறே எழுதும் அறிவும், இன்னும் பிற இலக்கிய நுட்பமும் கொண்டு இலக்கியஞ் சமைப்போரின் தொகை இலங்கையில் அருகிவருகின்றது. இதற்கு நூல் வெளியீட்டில் இடராக்குங் காரணமே காரணம் எனலாம்.

பாடநூல்கள் எவ்வாறாயினும் நிச்சய விற்பனையையும் நிரந்தர வருவாயையும் கொடுப்பன என்பதற்காக அதிக சிரத்தையெடுத்து பணத்தை மாய்த்து வரும் இலங்கை புத்தக அச்சக சாலைகளின் அதிபர்களுக்கு ஒரு சிறந்த இலக்கிய படைப்புக்குப் புத்தக வாழ்வு கொடுக்கும் இலக்கியக் கருணையோ தாராளமோ இல்லை. அன்பு! இது உங்களுக்குத் தெரியும்!

உங்கள் நாசித் துவாரங்களையும் பிய்த்தகற்றிக் கொண்டு அதோ புறப்படுகின்றதே அந்தப் பெருமூச்சு! அது எனக்கு நன்றாகத் தெரிகின்றது.

எனக்கு மட்டும் என்னவாம்?

எந்த ஒன்றும் உருவாவதற்குப் பின்னணியான காரணங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. முன்னணியின் பெருமையே பின்னணிதான். இக் கதைக்குப் பின்னணிகள் பல.

இந்த கதை எங்கள் ஊரில் என்றோ இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக நீங்கள் கற்பனை செய்து பார்க்க வேண்டும். அத்துடன் இதே கதை இற்றைக்குச் சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டு, வெளிவந்த கதையென்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.

இதன் படிவத்தைப் பார்த்த மாத்திரத்தே வியந்து, இரசித்து மகிழ்ந்து இதனை "ஈழநாடு" வாராந்தரியில் வெளியிட்டதுடன் எல்லா வழிகளிலும் என்னை ஊக்குவித்த பெருந்தகை திரு. இராஜ-அரியரத்தினம் அவர்களுக்கும், என் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிய திருமதி ராதா அரியரத்தினம், ஆசிரியை அவர்களுக்கும் இதனை வெளியிட்டு தந்த மதுரகவி இ. நாகராஜன் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக என்று இறைஞ்சுகிறேன்.

மண்டைதீவு வை. அ. கயிலாசநாதன்.
1972

## இரண்டாம் பதிப்பின் முன்னுரை

கடல் சார்ந்த வாழ்வினைப் பற்றி தமிழில் முதன் முதல் வெளியான நாவல் என்ற பெருமையினைப் பெறுவது எனது துணைவரால் எழுதப்பட்ட இந்தக் "கடற்காற்று". வாசகர்களாலும் விமர்சகர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்ற இந்த நாவலை புதிய பதிப்பாக வெளியிடும் எம்.டி.குணசேன நிறுவனத்திற்கும், தமிழ் வெளியீட்டுப் பிரிவின் ஆசிரியர் செ. யோகநாதனுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

எச் 1/2 அரசாங்கத் தொடர்மாடி இராசலட்சுமி கயிலாசநாதன்
கொழும்பு/4
1-6-2000

# 1

படை படையாக பொங்கிப் புரண்டு வரும் கடல் அலைகளின் அசைப்பிலே ஆடி உறங்கிக் கொண்டிருந்தன சில கடல் தோணிகள். அவற்றின் ஆட்டத்துக்கு ஏற்ப, கடற்கரை நெடு மணல்களின் ஓரங்களில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த தென்னைகள் தம் இலைகளை அசைத்துத் தாளம் இட்டுக் கொண்டிருந்தன. "சதக் சதக்" கென்று அலைகள் தோணிகளின் அணியங்களிலும், அடியிலும் வந்து வந்து முட்டிச் செல்கையில் ஏற்படும் ஒரு வித தாளவொலி அங்கு இயற்கை அன்னையின் எழிற் கூத்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லாமலே விளக்கிக் கொண்டிருந்தது.

மாலை வேளை அது. பகல் முழுவதும் உழைத்துக் களைத்து விட்ட பாட்டாளியின் பெரு மூச்சுப் போல, உதயத்தை, மதியத்தை, மாலையை மறந்து பூமியிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டிருந்தன செங்கதிர்கள். ஒற்றுமையின் சிகரங்கள் - மண்களிற் கால் படிய விரும்பாத - அப்படிப் படியவைத்து ஒற்றுமையற்ற மனிதத்துடன் கலக்க விரும்பாத காகங்கள் கெந்திக் கெந்தி மண்ணில் தாவிப் பறந்து கொண்டிருந்தன.

அருகருகே சடைத்துப் பசிய இலைகளையே செல்வமாக, மஞ்சள் வானமே பூக்களாகக் கொண்டவையாக நின்றிருந்த ஆவரச மரங்கள், வீசி வந்த காற்றில் எற்றுண்டு வந்த மணல்களையும் சருகுகளையும் தாமே தாங்கிக் கொண்டு தம்மைச் சார்ந்தவற்றின் மீது அவற்றைப் படிய விடாது தடுத்து நின்றன.

அந்த மனோரம்மியமான வேளையில் தன்னுடைய ஒரே சொத்தாக ஆறு ஆண்டுகளாக இருந்து வாழ்வளித்துச் சோறு போட்டு வரும் கட்டு மரங்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தான் தோமஸ்.

உருவம் அப்படியேயிருக்க உள் வாரியாகக் குடைந்து உக்கிப் போன பாலை மரம் ஒன்றை நடுவே வைத்து ஏனைய இரண்டு மரங்களை இருபுறமும் இணைத்தன அவனது கைகள். அவை தாம் அவனுடைய தோற்றத்தைக் காட்டும் எலும்புக் கூடுகள்.

கூனியிருந்து ஒரு காலை மரத்தின் மீது இட்டு மற்றதை மண்ணிற் பதித்திருந்த அவனுடைய உடலில் விலா எலும்புகள் அப்படியே புறப்பட்டு, ஏழ்மையை பறைசாற்றிக் கொண்டிருந்தன. உண்ணவோ உடுக்கவோ முடியாத சங்கடமான நிலையிலே தோமஸ் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதைத் தலையிலே கட்டியிருந்த பழைய மேற்சட்டை ஒன்றும் "வெட்கத்தை" மறைக்கும் நான்கு முழ வேட்டியும் நிரூபணஞ் செய்து காட்டின.

அடுத்த வேளைச் சோற்றுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் அவனுடைய சுருக்கம் விழுந்த வயிற்றின் ஊடாக, வியர்வைத் துளிகள் பாதை கட்டிப் பாய்ந்து அந்தக் கந்தையுடன் கலந்து கொண்டன.

அலுப்பு எதையுமே பார்க்காது கட்டு மரங்களைச் சேர்த்து ஒருவாறு கட்டி முடித்து விட்டுத் தலையை நிமிர்த்தினான் தோமஸ்.

மேலே உயர்ந்த அவனுடைய கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றன. இமைகள் இரண்டொரு தடவை படபடத்து விட்டு மீண்டும் ஓய்வு பெற்றுக் கொண்டன.

அவனுக்கு முன்பாக அவனுடைய மனைவி அன்னா நின்று கொண்டிருந்தாள். வாழ்விலும் தாழ்விலும் தோளோடு தோள் நின்று இன்பம் ஊட்டித் துன்பம் தீர்க்கும் ஒரே இலட்சியத்தின் பாதையிலே நடந்து வந்திருந்த – வரும் – அவள் பாதங்கள் கடல் நீரின் மெல்லிய தண்மையில் ஒய்யாரமாப் பதிந்திருந்தன.

இளமை இன்னும் விட்டு அகலாத அவளுடைய மாநிறக் கரங்கள் இரண்டும் தாங்க முடியாதவாறு சிலவற்றைத் தாங்கி நின்றன. ஒரு கையிலே சோற்றுப் பொட்டலம் இருந்தது. அது தான் "திரவியம்" தேடப்போகும் தோமசுக்கு இரவுக் காலத்தைக் கழிக்க உதவப் போகின்றது. மறு கையிலே ஒரு குவளை நிறையத் தண்ணீர் இருந்தது. விஞ்ஞான உலகத்திலே எல்லோரும் பயன்பெறும் வண்ணம் செய்ய முடியாத சாதனை கடல் நீரைக் குடிக்க வைக்க முடியாததுதான். அதுவும் இருந்தாலும் அந்த ஏழைகளுக்கு எங்கே கிடைக்கப் போகிறது? தோணியின் அணியத்திலே தூங்குவதற்கு அந்தக் குவளை தளம்பிக் கொண்டிருந்தது.

கையிலே இருந்த சோற்றுப் பொட்டலத்தையும், தண்ணீர்க் குவளையையும் வைத்தாள் அன்னா.

முழந்தாள் வரையும் பெருகி நின்ற வெள்ளம் அவளுடைய கால்களை உணர்வு கொண்டு மகிழ்ச்சியால் நுரை பெருக்கி ஓடியது. அவள் தனது ஆடையின் கரைச்சேலையை நனைய விடாது ஒரு கையால் கொய்து, இடையோடு ஒடுக்கிப் பிடித்தபடி நடக்க ஆரம்பித்தாள். கரையை நோக்கி விழிகள் பெயர நடந்து வந்த அன்னாவின் பிடியையும் மீறி அலைகள் அவளை அணைத்த பொழுது, அந்த மெய் சிலிர்ப்பில் அவள் தன் பலமழிந்து நீர் பட்டிருந்த சேலையை அள்ளிப் பிழிந்து, ஈரம் போக்கிக் கொண்டிருந்தாள்.

அன்னா குனிந்தவாறே அவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கையில், களைப்புற்றிருந்த தோமசின் கண்கள் அவளது பின் புறத்தைக் கவ்வின. இதுவரையும் சிந்தனையை எங்கோ விட்டு, செயலாற்றிக் கொண்டிருந்த தோமஸ் அன்னாவை பார்த்து மெல்ல நகைத்தான்.

வெற்றிலை உண்பதனால் காவி படிந்து அழுக் கேறியிருந்த அவனுடைய பற்களைக் கண்டு, அதனுள் தெரிந்த அவனுடைய இதயத்தைப் பார்த்துச் சிரித்தாள் அன்னா.

இருவரும் சிரித்துக் கொண்டே நின்றனர்.

"அன்னா! என்ன உன் பாட்டிலே நீயும் சிரிக்கிறாய் என்ன விஷயம்?"

கண்களை மெதுவாக மூடி மெய் மறந்து சிரித்தபடி நின்ற அன்னாவின் அந்த நகை தொடர்ந்தும் இருந்தது. கோடி கவலைகள் இருப்பினும் அவற்றுட் பாதியை மறைக்கக் கூடிய வல்லமை பெற்ற இந்தச் சந்திப்பில் சிரிப்பு தொடர்ந்து மலர்ந்து கொண்டிருந்தது.

"அன்னா!"

"உம் ம்"

"என்ன கேக்கிறனாக்கும்?"

"............"

"அன்னா!"

"உம் ம்"

"என்ன சிரிக்கிறாய்?"

"சும்மா!"

"என்ன சும்மா? ஆராவது பார்த்தால் பைத்தியக்காரி எண்டு நினைப்பினம்!"

"உக்ம்! நீங்கள் ஏன் சிரிச்சியளாம்?"

"ஒண்டுமில்லை இத்தனை சாமான்களோடை பெரிய கணக்காப் போறன். என்ரை முயற்சி எப்படியாகுமோ? ஆரு கண்டது. கர்த்தர் தான் காப்பாத்த வேணும்" என்றான் தோமஸ்.

நம்பிக்கையும் நம்பிக்கையீனமும் சேர்ந்து அவனைப் படைத்திருப்பதை அன்றிலிருந்து உணர்ந்து அறிந்துள்ள அன்னா அவனைத் தேற்றும் முகமாக "என்ன சொல்லுறியள்?" என்று கேட்டாள்.

புருவங்களைச் சுருக்கி, தன் அழகிய வெண் பற்களையும் வெளியே தூதனுப்பியபடி அவள் நின்றிருந்த பொழுதும், அவன் அப்படியே கூறிக் கூறிப்பழகி விட்டானே என்ற வெறுப்பும் சற்றுப் பிரதிபலிக்கவே செய்தது. கூடிய வரை முயன்று அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"வலையிலை ஒண்டும் படாட்டி?" தோமஸ் கேட்டான்.

"உங்களுக்கு சும்மா சந்தேகந்தான். நேத்தைக்குப் புதைச்ச வலையிலை ஒரு தூக்கு மீன் எண்டாலும் படாதே? பேசாமல் போயிட்டு வாருங்கள்! அது எல்லாம் படும்!"

ஆசி கூறி அனுப்ப முயன்றாள் அன்னா. "எனக் கெண்டால் நம்பிக்கையில்லை. எதோ போயிட்டு வாறன். கிடைச்சால் கிடைக்குது .... விட்டால் விடுகுது."

"இஞ்சை பாருங்கோ! நாமள் பிறக்கையிக்கை எந்த நம்பிக்கையோடு வந்த நாங்கள். பிறந்ததும் நம்மளைப் பெத்தவை ஏதோ செய்து எங்களை ஆளாக்கி விட்டிருக்கினம் தானே. நாமள் கலியாணம் முடிச்சம். அண்டே பெத்தவயின்ரை சொத்தும் சுகமும் போச்சு. கடல் மாதாவையும் அவவையும் எங்களையும் கண்காணித்துப் பாதுகாக்கிற பரமண்டலத்துப் பிதாவையும் நம்பித்தானே எல்லாமே ஆரம்பமாச்சு. நம்பிக்கையை விட்டு விடாதையுங்கோ! அதுதான் மனிசருக்குத் தேவையானது."

அன்னாவின் தத்துவமெல்லாம் தோமசுக்குத் தெரிந்தவை தாம். அவள்தான் அவனுக்கு எத்தனையோ விதங்களில் குருத்தினி. அவளுடைய ஒரு மொழியில் இந்த உலகத்தையே தவங் கிடந்து பெறுகின்ற உணர்ச்சி அவனுள் மேலோங்கி வரும்.

"எதைக் கொண்டு போறியள்?" என்று அன்னா கேட்டு விட்டு, அவனுடைய பதிலை எதிர்பாராதவள் போல, "கட்டு மரத்தைக் கொண்டு போனியள் எண்டால் காத்து பெலமாக அடிக்குது. தண்ணி பாய்ஞ்சு சங்கடப் படுத்திப் போடும். சோழகமும் கிளம்பியிட்டுது. தோணியைக் கொண்டு போங்கள்! தோணிக்குள்ளைதான் சோறு தண்ணி எல்லாம் வைச்சிருக்கிறன். தோணிக்கு மாசா மாசம் குத்தகைக் காசு கட்டிறதிலையே உழைக்கிறதெல்லாம் போகப் பாக்குது" என்றாள்.

அன்னாவை மடக்குவதற்கு அவனுக்கு வேறு வழி தென்படவில்லை. நகைத்தபடியே "உத்தரவு" என்று கைகளை கட்டி அடிமை நயம் பிடித்தான் தோமஸ்.

அன்னா அவனுடைய அந்தக் குத்திர நயத்தை இரசிக்காதவள் போல, மென்னையை ஒரு புறம் வைத்து,

நாடியில் கை புதைத்து நின்றாள். அவளுடைய அந்த ஒருக்களித்து நின்ற கோலத்திலும், அந்த "மம்மல்" பொழுதிலும் அனைத்தையும் மறந்தவனாகிய தோமஸ், தொங்கிக் கிடந்த அவளுடைய ஒரு கையைப் பற்றி இழுத்து "இச்" சென்று ஒலியெழுப்புமாறு செய்தான்.

பொருமும் மனப்பரப்பில் உறங்கியிருந்த தன் உணர்ச்சிகளை விழிக்கச் செய்த அவனை, "என்ன இது! ஆரன் பாத்தினம் எண்டால்....." என்று அன்புடன் கடிந்து நகர்ந்து நின்றாள் அன்னா.

"நேரம் எல்லோ போகுது!" அன்னா துரிதப் படுத்தினாள்.

"சரி" என்றபடி எழுந்து சென்றான் தோமஸ். தோணிக்குள்ளே கடல் நீர் சிறிதளவு அடியிலே ஊறிக் கிடந்தது. பட்டையை எடுத்து இறைத்து விட்டான் தோமஸ். ஒவ்வொரு பட்டை தண்ணீரும் வெளியே போகும் பொழுது, அவனுடைய நம்பிக்கையின் ஒவ்வொரு படியுங் குறைந்து கொண்டே வந்தது.

இதோடை இந்தக் கிழமை வந்து மூண்டு நாளாச்சு. கடல் தாயை நம்பி, நம்பி என்ன பலனைக் கண்டேன். ஆண்டவருக்கும் பொருளாயில்லை....ம்!"

நினைவுச் சுழல்கள் இயங்கத் தொடங்கின. அவற்றின் வேகத்தைத் தடுத்தாற்போல் அன்னா பேசினாள்.

"இஞ்சேங்கோ ...அந்தா மற்ற ஆக்களும் போகினம்.... சோளகக் காத்து பாய் விரிச்சுப் போகக் கூடிய மாதிரி வீசுது. இப்ப போனீங்க எண்டால் பட்டி வலைப் பக்கமாக நேரத்துக்குப் போயிடுவீங்கள்."

"சரியப்பனே!" என்று கூறிக்கொண்டே தோணியை அவிழ்த்து விட்டான் தோமஸ். தாங்கு கோலையும் எடுத்துத் தாங்கினான். தோணி மெல்ல நகர்ந்தது.

அவனுடைய போக்கையே எதிர்பார்த்து புகைவண்டி புறப்படும் வரை சிலையாக நின்று விட்டு அது புறப்பட்டதும் ஆரவாரித்துக் கையசைக்கும் சிறுவர்களைப் போல இதுவரையும் அமைதியாக நின்ற தென்னை இளங் கீற்றுகள் பெரிதாக ஆடி, அவனுக்கு விடை கொடுத்தன. ஆழமான பகுதிகளிலிருந்து கரை எம்பி எம்பி வந்தடைந்த அலைக் குஞ்சுகள் பெருமணலின் ஓரத்தில் நின்ற அன்னாவை "போபோ!" என்று சொல்வது போல் மறுபடியும் மறுபடியும் வந்து அவள் கால்களுடன் மோத முனைந்து கொண்டிருந்தன.

இறகு ஒதுக்கிப் பறக்கும் கடற் காகங்களின் ஒரு பக்கத் தோற்றம் போல கருங்கற் கடல் என்று வழங்கப்படுகின்ற அந்தக் கடல் மாதாவின் தென் கோடி நீளம் மரக் கலங்கள் சென்றுகொண்டிருந்தன.

அவற்றிலிருந்து பிறந்து வந்த "ஏலேலோலம்" உருமாறிச் சிதைந்து காற்றிலே மிதந்து வந்தது.

தோமஸினுடைய தோணி தனி வழியே போய்க் கொண்டிருந்தது. அவனுக்குத் துணையாக எவரும் இல்லை. கூட்டங்களையும் அவன் விரும்புவதுமில்லை. பரந்த கடலின் அலைகளை நம்பினாலும் கூடிக்கெடுக்கும் கூட்டங்களை நம்ப முடியாதே.

அவன் போவதையே கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றாள் அன்னா. அவளுடைய கண்கள் சிறிது கலங்கியிருந்தன.

இரவின் தனிமையை எண்ணியதால் உருவானதோ அன்றி கருங்கடலிலே தனியே காலங் கழிக்க வேண்டியிருக்கிறதே என்று ஏங்கியதால் பனித்ததோ என்று கூற முடியாதவாறு கண்களின் நீர்மை காணப்பட்டது.

தோமஸ் கடலிலே கலங்கட்டிச் சென்று மீன் பிடித்து வருவதும், அன்னா இப்படியே சோற்றுப் பொட்டலத்துடனும் தண்ணீர்க் குவளையுடனும் வந்து வழியனுப்பி வைப்பதும் நிரந்தரமாகி விட்ட விடயங்கள். ஆனால் கடந்த மூன்று நாட்களாக அன்னாவினுடைய மனமும் சரியாக இல்லை. தோமஸ் அதிகமான அளவுக்கு மீன்களைப் பிடித்து வந்து சந்தையிற் குவிக்கவில்லையே என்ற கவலை மட்டுல்ல.... அவளுடைய பிள்ளைச் செல்வங்களின் தேவைகள் பற்றி உண்டான ஏமாற்றமும் இருக்கத்தான் செய்தது.

நாளாந்தம் மண்டைதீவிலிருந்து பஸ்மூலம் யாழ்ப்பாணம் மகளிர் பாடசாலைக்குப் படிக்கப் போய்வரும் ஒரே மகளான அலிசைப் பற்றிய வருத்தம் அவளை வாட்டி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

நகரத்திலே உயர் வகுப்பில் கல்வி கற்கும் அலிசுக்கு பஸ் கட்டணம் முதல் பள்ளிப் பணம் வரை கட்டியாக வேண்டும். அவை யாவும் தோமஸ் தேடிக் கொண்டு வரும் செல்வங்களிலேயே தங்கியிருந்தன.

அன்றாடங் காய்ச்சிகளாக வாழும் அவர்களுக்கு வேறு ஒரு கஷ்டம். பார்த்தவர்கள் தாம் அப்படிச் சொன்னார்களே தவிர, அன்னாவோ தோமஸோ அப்படிக் கனவிலும் நினைக்கவில்லை. ஊனம் நிறைவாக உடையதோ, அற்றதோ பெற்றவர்களுக்கு அது பிள்ளைதானே?

அன்னாவினுடைய தாலிப்பாக்கியம் அளித்த இரண்டாவது பரிசு ஒரு முடம். ஜேக்கப் பிறந்து ஐந்து ஆண்டுகளாகியும் அவனுடைய உடலில் எவ்வித திருப்தியையுங் காண முடியவில்லை. சில்லாலை முதல் சித்தங்கேணி வரையுள்ள தமிழ் வைத்தியர்கள், கண்டி வீதி நெடுகலும் உள்ள ஆங்கில வைத்தியர்கள் அனைவரும் தங்களால் இயன்றளவு முயன்று, இறுதியில் வாங்கிய பணத்தை உள் வைத்தபடி கையை விரித்து விட்டனர். இயல்பாகவே முடங்கிவிட்ட கால்களை நிமிர்த்துவதற்கு அறுவைச் சிகிச்சை தான் அவசியமானது என பெரிய வைத்தியசாலை டாக்டர் தனது வழமையான பாணியில் கூறியதும், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி! என்ற நிலைக்கு தோமசும் அன்னாவும் வந்தார்கள்.

ஜேக்கப்பினுடைய நிலை என்ன மாதிரி ஆனாலும் அவன் பிறந்தவாறே வளர்ந்து முடிந்தாலும் மேற்கொண்டு வைத்தியம் எதுவும் செய்வதில்லையென முடிவு கட்டி விட்டார்கள். வைத்தியர்களுக்குச் செலவழித்த பணத்தைக் கடல் அன்னையிடமிருந்தே அன்றெல்லாம் பெற்றிருந் தார்கள். அதனை அவள் பெயரால் "அவதரித்து" விட்ட ஜேக்கப்புக்காக அந்தக் கடல் மாதாவுக்கே காணிக்கையாக்கி விட்டதாகவும் அவர்கள் எண்ணத் தவறவில்லை. கடலிலே போட்டதை யாராவது கணக்குப் பார்ப்பார்களா?

ஜேக்கப்பினுடைய உடல் நிலை தேய்ந்து கொண்டே வந்தது. அன்னாவுக்கு இந்த உலகில் வேதனைப்படுத்தும் ஒரு காட்சியாக அவன் இருந்ததும் என்னவோ உண்மை. துன்பமே வாழ்க்கையாகிவிட்டால் பின்னர் இன்பத்தை அனுபவிப்பது தானே கஷ்டம். குளிர் தேசத்து மக்கள் வெப்ப வலயத்தைத் தாங்க மாட்டாது தவிப்பது போல, வெப்ப வலயத்தவன் குளிர் தேசத்தில் குறண்டிவிடுவது போல் துன்பத்திலே

பரீட்சிக்கப்பட்டு, பழக்கப்பட்டும் விட்ட தோமஸ் குடும்பத்துக்கு ஜேக்கப் பாரமாகவில்லை.

அன்னா அவனை அணைத்தாள். அருமை மகளாக வந்து அழகாக - மூக்கும் விழியுமாகத் தோற்றிய அலிசை எவ்வாறு உச்சி மோந்து நச்சினாளோ அவ்வாறே ஜேக்கப்பையும் விரும்பினாள். தாய்மையின் பெருமைக்கு எழுந்த கேள்விக் குறியில் அன்னா அணுவளவும் தோற்கவில்லை.

அன்னாதான் ஜேக்கப்பினுடைய உலகம். விளையாடுவது, சாப்பிடுவது, உறங்குவது எல்லாம் அவளுடன் தான். ஏனையவர்களுடன் சேர்ந்து விளையாடத் தனக்கு கால்கள் இல்லையே என்று ஜேக்கப் நினைத்ததில்லை. பெரியவனாகத் தான் வளர்ந்த பின்பு மற்றவர்களைப் போலத் தனக்கும் கால்கள் நடப்பதற்கும் ஓடுவதற்கும் உறுதுணையாகும் என்று அந்தப் பிஞ்சு மனம் ஒரு வேளை எண்ணியிருக்கவுங் கூடும். அன்னாவின் செல்வம் ஜேக்கப்புக்கு நிறைய விருந்தது. பொம்மைகள் இல்லாத வேளைகளில் தானே பொம்மையாகவும் மாறும் அந்தத்தாயைப் பிரிந்து ஜேக்கப்பினாலும் இருக்க முடியவில்லை.

மக்களுடைய நினைவு மனத் திரையில் ஒளிர் விட்டதும் அன்னா வீதியை நோக்கி நடந்தாள். "பீச் றோட்" என்று அக்கிராமத்தவர்களால் செல்லமாக அழைக்கும் பேற்றைப் பெற்ற அந்த தார் வீதியில் அவள் ஏறி நடந்ததும் என்றும் எதிர்பாராதவாறு முத்துமாணிக்கம் வந்து கொண்டிருந்தான்.

முத்துமாணிக்கம் வேளாண்மை செய்து கொண்டிருந்தான். அவனுக்கு கடலையடுத்துள்ள மேட்டு நிலத்தின் செம்மண் பிரதேசத்தில் ஒரு புகையிலைக் கன்றுத் தோட்டம் உள்ளது. அதனைச் சீராக்கிப் புகையிலை செய்வதும் பின்னர் புகையிலிட்டு பூட்டுப் பூட்டாகக் கட்டி, சிப்பங்களை பொல்காவலைக்கு

அனுப்பி விட்டு அவற்றை அங்கு சில மாதங்கள் தங்கியிருந்து விற்பதும் தொழிலாகக் கொண்டவன்.

இடையிடையே மனைவியின் சுகத்துடன் தன் அதிகப் படியாக வளர்ந்துவிட்ட உடம்புக்கும் உழைப்புக்கும் ஈடுகொடுக்குமுகமாக வேறு பெண்களையும் மெல்ல வருடி வாழ்பவன். வாழ்க்கையே பலவித சுவைகளைக் கொண்டது என்று பேசும்அவனுக்கு ஏக பத்தினி விரதம் எல்லாம் எடுபடாது.

ஊரின் கிழக்கேயும் தெற்கேயும் உள்ள வேளாளர் குடும்பங்களிற் பல முத்துமாணிக்கத்திடமே கடன் பட்டு புகையிலை செய்து, அவற்றை அவனுக்கே பின்பு கொடுத்து கடனையும் வட்டியையும் அடைக்க முடியாது பற்றுச் சீட்டும் கொடுப்பவர்கள். அந்தத் தீவிலிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் நான்கு ஐந்து பிரமுகர்களில் அவனும் ஒருவன். ஆனால் அந்த அனைவரிலும் பார்க்கப் பராக்கிரமும் பணமும் மிக்கவனாக இருந்தமையால் வேளாளர் மத்தியிலும், மீனவர் மத்தியிலும் அவனுக்கு "மதிப்பு" இருந்தது. பயம் என்பதே மதிப்பு என்றால், அவனைக் கண்டால் அழகான பெண்கள் ஆண்டவனைத் துணை நாடுவார்கள்.

அன்னா ஒரு கன்னிப் பெண்ணுக்குத் தாயாக இருந்த பொழுதும் அவளிடம் அன்று வந்து தஞ்சம் புகுந்த அழகு, மண வாழ்க்கையின் மைய காலத்திலும் உள்ளவாறே குடி கொண்டிருந்தது.

மேலாடை கொண்டு மார்பகங்களை மூடாது, சட்டையும் அதன் கீழே சேலையுமாக அணிந்து, பின்னழகைமெரு கூட்டும் வண்ணம் கொய்யகமும் வைத்து அவள் உடுத்துச் செல்லும் அழகை அந்நாட்களில் தவறவிடாமல் இரசிக்கும் ஏனைய சாதி இளைஞர்களுள் முத்துமாணிக்கம் தலைவன்.

நிலவின் கதிர்கள் பூமியிற் படியத் தொடங்கும் நேரம் கையில் கோடுகள் தெரியாதுவிடினும் முகங்களைக் கண்டு புரிந்து கொள்ளக் கூடிய வேளை அது.

முத்துமாணிக்கம் வந்து கொண்டிருப்பதைக் கண்ட அன்னா தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு தார் வீதியினின்றும் இறங்கி கரையோரமாக வழிந்து சென்ற மணற்பாதையில் இறங்கி வேதக் கோவிற் பக்கமாக நடந்தாள்.

அவளுடைய நாணத்திலும் அச்சத்திலும் ஏற்கனவே ஏறியிருந்த வெறி மயக்கம் அவனை மெள்ள ஈடுபடச் செய்தது. அவன் வீதியை விட்டு அகலாது இடுப்புகளில் கைகளை மடக்கிப் புகைத்தபடி ஒல்கி ஒல்கிச் சென்ற அன்னாவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உன்ரை சாதிக் காறியளை சிவத்தத் தாளோடையும் பச்சைத் தாளோடையும் சமாளித்த நான் உனக்கு வேணுமெண்டா இந்தா நீலம்...."

முத்துமாணிக்கத்தின் குரல் அந்த சனசஞ்சாரம் அருகி விட்ட பகுதியில் வீசிய காற்றில் பலமாகக் கேட்டது. ஐயோ என்று அன்னா அபயக் குரல் எழுப்பி அலறினாலும் – பக்கத்தில் உள்ள அழகையா யாழ்ப்பாணத்தில் பகல் எல்லாம் சுற்றியடித்து விட்டு இரவு பத்தரை மணி பஸ்ஸில் தான் வருவார். அந்தப் பகுதியில் உதவிக்கு வரக்கூடிய ஆண்கள் அவரைத் தவிர வேறு யாருமில்லை.

அன்னா மிரண்ட பார்வையுடன் ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். முத்துமாணிக்கம் இடி இடியென்று சிரித்தான்.

"நான் இண்டைக்குத்தான் பொல்காவலையாலை வந்தனான். நீ போ பிள்ளை. நான் பிறகு காணுறன்."

அவனுடைய மிளிறல் வார்த்தைகளில் ஒத்தி வைத்த பொருள் இருப்பினும், இந்த முறையும் அவனிடமிருந்து தப்பிய தெம்பில் மகளின் கதி என்ன? என்று மனம் கேட்டுப் பதைக்க "கிரவல்" வீதியில் கால்களை தத்தித் தத்தி மிதித்து விரைந்து கொண்டிருந்தாள் அன்னா.

# 2

அவர்களுடைய வீட்டுக்கு நேரே கிழக்காக கிழக்கு முகம் பார்த்து அமைந்து விளங்குவது தான் அர்ச். சூசையப்பர் கோவில். முன்னேயுள்ள பனைவளவுகளுக்கும் வட புறமாகப் பரந்து காணப்படும் வயல்களுக்கும், அதனுட் புதையுண்டு பாழ்பட்டுக் கிடக்கும் சம்புக்குளத்துக்கும், மேற்கும் தெற்கும் நீக்கம் இல்லாது நிறைந்துள்ள குடிமனைகளுக்கும் நடுவில் கம்பீரமாக ஓங்கி நிற்கும் அதன் கோபுரங்கள் அறிவு குன்றிய ஆயிரம் மக்களுள் தலை நிமிர்ந்து நிற்கும் தன்மையுள்ள அறிஞனை நினைவுப்படுத்திக் கொண்டிருந்தன.

கோயிலின் வடகிழக்கு முன் மூலையின் கோபுரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிற கோயில் மணி, ஓய்ந்த பறவைகளின் சலசலப்பை மீண்டும் கிளறிவிட்டுத் தான் ஓய்ந்து கொண்டது.

ஆலய மணியின் இனிய ஓசை ஏனைய இடங்கள் எல்லாம் பரந்து திறந்து கேட்டது.

"கோயில் மணியும் அடிச்சிட்டுது. என்ரை பிள்ளை இத்தறுதிக்குப் பள்ளிக்கூடத்தாலை வந்திருப்பாள்."

தோமசின் உள்ளத்திலே பேரமைதி. இருட்டி விட்டால் கன்னிப்பெண் என்ன செய்வாளோ என்று ஏங்கும் அவனுக்கு கோயில் மணி ஆறுதலை அளித்தது.

ஆண்டவர் என்ற ஒரு சொல் மனித இதயங்களில் நிறையாதிருக்குமானால், மனித வர்க்கத்தின் கதையே என்றோ முடிந்திருக்கும். இல்லாமைக்கும் பொல்லாமைக்கும் நடுவில்

சொல்லாத துன்பங்கள் வந்த போது "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் ராஜ்யமும், வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே!" என்று ஜெபம் செய்யும் வேளை அவை அவர்களை விட்டு அகலுகின்றன போன்ற அருட்டுணர்வு தோன்றும்.

மனிதமே இதற்கு உட்பட்டது தான். தோமஸ் இதற்கு விதிவிலக்காவானா? நெஞ்சமெல்லாம் பரலோக நாயகருக்கே தஞ்சமென அவன் கொடுத்திருந்தான்.

அந்தச் சிறு கிராமத்தில் எந்நேரம் எந்த விதத்தில் என்ன ஆபத்து வரும் என்பதை யாருமே அறியார்.

கஷ்டம் நல்லவர்களையும் நாடிவந்ததுண்டு. அப்படியான துரதிருஷ்டத்துக்கு ஆளானவன் தான் தோமஸ்.

தோமசின் நினைவுகள் சுருள்களை அவிழ்த்தன.

"அலிஸ் சீலையள் வேணுமெண்டவள். இந்த முறைக் கோயில் காசை ஒரு மாதிரிக் கட்டிப்போட்டனெண்டால் அங்காலை எப்பிடியும்அவளுக்கு ஏதாச்சும் வாங்கிப் போடலாம்."

அப்படி அவன் எண்ணினானோ இல்லையோ பேரலையொன்று வந்து தோணியின் முகப்பை அதிர்த்தது. அதன் விசையிலே அவனுடைய உள்ளம் போலவே தோணியும் சிறிது ஆட்டங் கண்டது. அலை பாய்ந்து வந்து முட்டியதாற் சீறிப் பாய்ந்த நீர்த்திவலைகள் காற்றை உள்ளடக்கித் தோணியை இழுத்துச் சென்ற பாய்ச்சேலையை நனைத்து விட்டன. தோணி

ஓடிக்கொண்டிருந்தது. அதன் புறம் காற்றுச் சுமை பெருகவே சாய்ந்தது. அது தோற்றுப் போன, தன்னிலேயே தாழ்வு மனப்பான்மை கொண்ட அவனுடைய உள்ளத்தைப் போலத் தொய்ந்து விட்டது.

தோமஸ் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்த்தான். தூரத்தில் சில தோணிகள் தென்பட்டன. வசதிகளும் உதவிகளும் அற்றவனாக அவன் இருந்தான். அதனால் மற்றையவர்கள் நடுக்கடலில் செய்யுந் தொழிலை அவனாற் செய்ய முடியாமற் போய் விட்டது. "நைலோன்" வலைகளை ஆயிரம் ரூபாய் செலவில் வாங்குவதற்கு அவனிடம் பணம் ஏது? முதலில் வழி ஏது? கொழும்பிலே அவற்றை வாங்க அங்கு செல்வதற்குத் தேவைப்படும் முப்பது, நாற்பது ரூபா அவனுடைய குடும்பத்தின் ஒரு கிழமை வாழ்க்கைக்குப் போதும்.

அவனுடைய பாய்த் தோணிக்கும் வலைக்களத்திற்கும் இருந்த தூரம் நெருங்கி விட்டது. அதைப் போலவே பகலுக்கும் இரவுக்கும் இடையேயிருந்த நேரம் குறுகி அழிந்தது.

வலைகளின் ஓரமாகத் தோணியை விட்டான் தோமஸ். அடைக்கப்பட்டிருந்த பட்டிவலைகளைச் சுற்றி ஒரு முறை வலம் வந்தான். தோணி இலாவகமாகத் திரும்பி ஊர்ந்து சென்றது. நிறுத்தப்பட்ட கம்புகள் ஒட்டைகள் இருந்து முடக்கப்பட்ட வலைத்துண்டுகள் யாவும் "சீராக" இருந்தன.

தன்மீது ஒருவரிடமும் பகையில்லை. அதனால் ஏனையவர்களுக்கு நடப்பது போல் தனது வலையோ கம்புகளோ களவு போவதுமில்லை என்ற துணிச்சல் மட்டும் அவனுக்கு நிறையவுண்டு. நெருஞ்சி முள்ளை அகற்றுவதற்காக வாழைத்தண்டை உருட்டி, அதனை இல்லாமலே செய்யும்

மனிதர் நாணலைப் பற்றி அதிக சிரத்தை எடுப்பதில்லையே. அதுவும் நெருஞ்சிகளின் மத்தியில் முளைத்து விட்ட நாணலைப் பற்றியும் சொல்ல வேண்டுமா?

தோமசின் வலைகள் எவ்வளவுக்கு எவ்வளவு அவனுக்கு நிரந்தரமானவையோ அவ்வளவுக்கு அவனுடன் தொழில் செய்யும் பலருடைய வலைகளும், அவற்றுடன் உள்ள கம்புகளும் நிலையற்றவை.

காலையில் கடற்கரையில் வந்து தங்கள் "கடன்" களை முடித்து விட்டு, கடல் நீரிலேயே முகத்தையும் கழுவிக் கொள்ளும் சில கமக்காரர்களுக்கு ஒழுங்காகவும் வாடிக்கையாகவும் மீன் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுட் பலருக்கு இருந்தது. அந்தத் தீவில் என்றோ வாழ்ந்து மறைந்து விட்ட ஒரு செம்படவனின் பலவீனமான அந்தச் செய்கை வழி வழி வரும் எல்லாச் செம்படவர்களையும் அத்தகைய வாயாடி, கையாடிக் கமக்காரர்களுக்கு அடிபணியச் செய்து வருகிறது. அந்தச் செம்படவன் அன்று எதிர்த்திருந்தால் இன்று இல்லாத இயலாத மீனவர்கள் இந்தக் கமக்காரர்களின் "குடிமக்கள்" போன்ற நிலையில் இருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஆரம்பமே பலவீனமெனின் அதன் முடிவு மட்டும் என்னவாக இருக்க முடியும்?

மீன் கொடுக்கமறுக்கும் செம்படவர்களுக்கு வசைமாரிகள் அழகாக விழும். ஒரு வேளை தோமசின் ஒன்று விட்ட சகோதரன் கமக்காரருக்கு மீன் கொடுக்க மறுத்த பொழுது, "முறித்து" விட்டனர். அவர்களுடைய குடிசைகளே தீ அன்னையின் கொடூர வாய்க்குள் இரையாகிவிடும்.

சுற்றி வளையக் கடல் தெய்வத்தின் காவலில் இருக்கும் அந்தத் தீவில் அட்டகாச நாசக்காரிகளே தலைவர்கள் என்ற நிலையும் உருவாவதுண்டு.

இந்த விதத்தில் தோமஸ் நிலையைச் சமாளித்து விடுவான். அந்தக் கமக்காரர் கூட்டத்தில் வாய்த்துடுக்கும் கை மிடுக்கும் உள்ளவனைப்பார்த்து தன்னால் இயன்ற தொகையான மீன்களைக் கொடுப்பான். மற்றையோர் கேட்கும் பொழுது இல்லையென்பான். தலையாய கமக்காரன் தனது சக கமக்காரர்களையே அடக்கி விடுவான். அதனால் அவனுக்குச் சோலி "அசட்டு" களே வருவதில்லை.

தோணியை வலைகளின் ஓரமாக விட்டு நங்கூர மிட்டான் தோமஸ்.

வெண்மையாக, தூய வடிவிலே தாழைகள் எதுவுமற்றுக் காணப்பட்ட கடற்பரப்பிலே கால்வைத்து இறங்கினான். "சில்"லென்று குளிர்ந்தது. அவன் வரவுக்காகக் காத்திருந்த கடற்கன்னி அவனை வாரி அணைத்த பொழுது ஏற்படும் சுகம் போன்று இருந்தது அது.

மடியிலே கட்டியிருந்த தீப்பெட்டியை எடுத்தான். காதிலே தலைப்பாகையின் அடியில் சொருகப் பெற்றிருந்த பீடியையும் எடுத்து, குச்சியொன்றைக் கிழித்துப் பற்றவைத்தான். இவ்வளவும் அவன் செய்வதற்குள் குளிர்ச்சியின் வேகத்தில் அவனுடைய உடல் வெலவெலக்கத் தொடங்கி விட்டது. ஆர ஓர் இழுவையில் குமண்டிய புகையை நாசியாலும் வாயாலும் வெளிவிட்ட பின்பு நடக்கத் தொடங்கினான். சதைப்பிடிப்பற்ற அவனுடைய உடல் பலத்தை இழந்தது மட்டுமன்றி, நரம்புகளிலும் தளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

பட்டிவலைகளினூடே புகுந்தான் தோமஸ். உட் புறமாக விழுந்த சில சின்னக் கம்புகளை எடுத்துச் சாற்றி நிறுத்தி விட்டு மேலும், மேலும் தன் ஆரம்ப வேலைகளில் ஈடுபடத் தொடங்கினான்.

எம்பி, எம்பி வரும் கடல் அலைகளின் சூழலில் பொங்கி, பொங்கி வரும் கவலைகளின் உந்துதலில் தோமஸ் தனியன் ஆனான். அவனுக்குத் துணையாக வானத்தில் நிலவு மட்டும் வந்திருந்தது. அவனைப் பொறுத்த வரையில் அந்த நிலவு வந்திருந்த வானத்துக்கும் அப்பால் தேவ சிங்காசனத்தில் இருந்து கொண்டு அவனை ஒருவர் பராமரிக்கிறார் என்ற நம்பிக்கையும் இருந்தது.

# 3

"தோமஸ்! இஞ்சை பாரப்பா! உன்ரை கஷ்ட நஷ்டங்களைப்பற்றிக் கவலைப்பட நாங்கள் ஆக்களில்லை. நீ கட்ட வேண்டிய காசை இண்டைக்கே தந்திடு. இல்லாட்டி கோயிலுக்கு வந்து சுவாமியிட்டைச் சொல்லு!"

காலையில் எழுந்ததும், எழாததுமாக வெளியே கண்களைக் கசக்கித் தெளிவைக் கண்டு கொண்டே வந்த தோமசிடம் கூறினான் அந்தோணி.

"எட! நித்திரைப் பாயாலை எழும்புரதுக்கு இடையிலை உனக்கு என்ன காசு! பொறன்!"

"எனக்கு இல்லை தோமஸ். கோயிலுக்கு"

அந்தோனியின் கடுமை பொங்கி வழிந்தது. கிராமத்திலேயே செல்வம் மிக்க பணக்காரனாக அந்தோணி இருந்தமையால் அந்த "வரி" வசூலிக்கும் வேலை அவன் ஒருவனையே நாடிச் சென்றது. அதன் பூரண உரிமையையும் அவன் பிரயோகப் படுத்தி வந்தான்.

"கோயிலுக்கும் சுவாமிக்கும் காசுகொடுக்க மனிசனிட்ட இருந்தாத்தானே. படைச்ச கடவுள் படைச்சார். பணத்தையுமாவது எங்களுக்குத் தரக்கூடாதோ? அல்லது செய்யிறவேலைதான் சரியா வருகுதோ? கால் வயித்துக் கஞ்சிக்குக் காணாத பிழைப்பு. சே! நரக வாழ்க்கை...."

அலுத்தான் தோமஸ்

"எனக்கென்ன இன்னம் இரண்டு நாளையிக்கை காசு கட்டியிட்டாய் என்டால் சரி. அங்காலை நீயே பார்த்துக் கொள்."

அந்தோனி வெறுப்புடன் கூறிவிட்டுப் போய் விட்டான். அவன் போவதைச் சிறிது நோட்டம் விட்டு விட்டு "உம்!" என்ற பெருமூச்சை வெளியே விட்டான் தோமஸ்.

"கர்த்தரே என்னை மன்னிச்சிடுங்கள் நான் தப்பாச் சொல்லிப்போட்டன் போலை கிடக்குது. எப்படியாவது அந்தக் காசைக் கட்டிப்போடுறன்"

தனக்குள்ளே பிரார்த்தனை செய்து வேண்டியபடி, சென்ற தோமஸ் வீட்டுக்குட் புகுந்தான். வாசற் படியின் மேலேயுள்ள வளையில் ஆணி அறைந்து தொங்கவிடப்பட்ட படத்தில், மனித உருவாய் வந்து, ஆணி அறைந்தே தொங்கவிடப்பட்ட தேவனின் ராஜ்யத்திற்கு முன்னால் நின்று பணிந்து ஜெபித்தான்.

அவனுடைய கைகள் சிரமிருந்து நெஞ்சம் வரை குறிகள் தொட்டன. இதயமும் சேர்ந்து பிரார்த்தித்தது.

பணமும் சுகமும் அற்று வரண்டு கொண்டே செல்லும் நிலையில் மனம் மட்டும் நிறைவாக இருக்குமா? அந்தப் பக்குவ நிலையை தோமஸ் அடைவதற்கு இன்னும் எத்தனையோ நெடும்பகல்களை அவன் தாண்ட வேண்டுமே!

மனதில் இந்த நினைவு அலைகள் பொங்கி எழுந்து அவனுடைய மனச்சாட்சியைத் தூண்டிவிட்டன. அது அவனைக் கொன்று கொண்டேயிருந்தது.

தன்னுடைய அந்த நிலையைச் சமாளிக்க முடியாதவனாய் வெளியே நடந்தான்.

"என்ன இருந்தாலும் தோமஸ் அண்ணனுக்கு இவ்வளவு திமிரான பேச்சு ஆகாது!" தனது வீட்டினுள் நின்று கொண்டு மேரியம்மா சொல்வது அவன் காதுகளில் கேட்கிறது.

உள்ளிருந்தவாறே "என்னது?" என்று கேட்டாள் அவள் புருஷன்.

"இந்த மனிசனுக்கு இப்ப கொஞ்ச நாளாக சாபம் பலிச்சிருக்குது. மரித்த தினத்திலும் உயிர்த்த தினத்திலும் மட்டும் ஜெபிச்சாப் போதுமா? மனிசன் மாடாக உழைச்சது தான் மிச்சம். ஆண்டவரை மறந்து உழைச்சு என்னத்தைக் கண்டினம். எண்டைக்கும் பட்டினி.... இல்லையெண்ட பேச்சுத்தான்......."

"உனகேன் உந்தக் கதையெல்லாம். மற்றவங்கடை திறக்கு இழுக்காமல் சும்மா இரு", என்று கணவன் அதட்டினான்.

"எனக்கொண்டுமில்லையணை! அந்தோனி முத்தண்ணன் வந்தப்போ இந்த மனிசன் நாய் மாதிரி விழுந்தான். அவ அன்னா எண்ட குண்டிமரியாளுக்கு மட்டும் இராசாத்திப்பட்டம். ஒருக்கா வெளியிலை வந்து பதிலைச் சொன்னா என்ன?"

"எடி ஆத்தை! உன்னை ஆரு இப்ப என்ன கேட்டது?" என்ற ஆங்காரமான குரல் கேட்டதும் மேரியம்மா "ஆரடி அது" என்று கேட்டபடி வெளியே வந்தாள்.

"எணை மரியாத்தா! உனக்கு உள்ளதைச் சொன்னவுடனை ரோசமே வந்திருச்சு. உன்ரை புரியன் மட்டும் என்ன சொன்னானாம்." என்று வரிந்து கட்டினாள் மேரியம்மா.

"வாயை அடக்கணை! உன்னைப்போல நாலு வழியாலையும் உழைக்க எங்களாலை முடியாது தான். அதுக்காக இப்படிக் குத்திக் கதையாதை" என்றபடி விசும்பினாள் அன்னா.

"ஆரையடி சொல்லுறாய்? உன்னைப் போல வெள்ளாளங்களையும் வாத்திமாரையும் பதம் பாத்தனானேடி, உனக்கு இல்லாத வரும்படி எனக்கு எப்படியடி வரும்...." மேரியம்மா தூஷித்தாள்.

அன்னா காதுகளைப் பொத்திக் கொண்டு நின்றாள். அவளும் அந்தக் களங்கப்படுகின்ற அபாக்கிய நிலைக்கு ஆளான மண்ணிலே பிறந்து விட்டதனாலோ என்னவோ பேசினாள். மேரியம்மா அதற்கு சளைத்தவளில்லை.

"முத்துமாணிக்கத்தின்னரை பணம் எல்லாம் முடிஞ்சுதோ?" என்றாள் பெரிதாக நகைத்தபடி.

"உன்ரை நினைவிலை சொல்லுறியோ?" என்றவளை தோமஸ் உலுப்பி, வீட்டுக்குள் போகும்படி கூறினான்.

அந்தக் கிராமத்து மீனவப் பெண்கள் வாய் திறந்து விட்டால் ஆடவர்கள் புதருள் பதுங்கிய மீன்களாகிவிடுவர். அந்த நிலையே அன்றும் அங்கு நிலவியது.

தோமஸ் வலைகள் யாவற்றையுந் தேடி விட்டான். அவற்றின் வழியே சென்று திரைகளின் தாக்குதல்களுக்கு உள்ளானவற்றைச் சரிப்படுத்தினான்.

அவனுடைய மனம் அமைதியற்றுக் காணப்பட்டது. நிதானமாக நீரைக் கிழித்து நடந்து வந்து தோணியினுள்ளே போடப்பட்டிருந்த பலகையிலே படுத்துக் கொண்டான் தோமஸ்.

வள்ளத்திலே கிடந்த வண்ணம் கண்களை மனம் போல்விட்ட தோமஸ் தோணி முகப்பின் கீழே அமைதியாக வைக்கப்பட்டிருந்த சோற்றுப் பொட்டலம், குவளை யாவற்றையும் கண்டான்.

நிலவின் தண்ணிய ஒளியிலே பசிப்பது போன்ற பிரமை ஏற்படத்தான் செய்தது. மனைவியின் நினைவு மனதில் பதியவே பசி சற்று பறந்தது. அன்னாவினுடைய இனிய நினைவுகளைத் தொடர்ந்து தோன்றிய அன்று நடந்த காட்சிகள் அனைத்தையும் மறக்கடித்தன.

"போதும் போதாததுக்கு அக்கம் பக்கமும் பகையாய் போச்சுதே! அவன் செல்லமுத்தன் முந்தி ஒரு துணையாக இருந்தான். அவன் எனக்கு என்ன மாதிரியெல்லாம் உதவி செய்தான். என்ரை பொல்லாத காலம் அவனோடை பகைக்க வேண்டியாச்சு"

"அவனும் விட்டது பிழைதானே! முந்தின மாதிரி ஒரு சகோதரம்போலை இருந்திருக்கலாமே. பெண்ணாசை பிடிச்சவனோடை எப்பிடி ஒண்டாத்திரியிறது. இஞ்சையுள்ள சில வெள்ளாம் பெடியள் பெண்டுகளைக் கெடுக்கிறது மாதிரி ஒரு கரையானும் கெடுத்தா பூமியிலை பெண் பிரசுகள் வாழுறதில்லையோ? அதுகளுக்கு வாழ்க்கை எண்ட ஒண்டு வேண்டாமோ?"

"சும்மா ஆடுமாடுகள் மாதிரி முறை தலையில்லாமல் சில தறுதலையள் திரியுதுகள். அது போலை செல்லமுத்தனும் என்ரை சோத்தைத் திண்டுபோட்டு என்ரை வீட்டிலையே ஆசைவைச்சானே.....உம்."

தோமஸ் புரண்டான்.

"இன்டைக்கு அன்னாவுக்கு தேள்வையில்லாத கதை. அவள் மேரியம்மா வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் பேசுவாள். அவளோடை இவள் வாய் காட்ட ஏலுமே? இப்ப ஒரு மாதிரி உறவெண்டு இருந்த வீடும் போச்சு... கர்த்தரே! நாளைக்கு "ஐயோ!" எண்டால் ஒருத்தன் கூட எட்டிப் பார்க்க மாட்டாங்களே!" இதை நினைக்கும் பொழுது தோமசுக்கு நெஞ்செல்லாம் கனத்தது. அத்துடன் மற்றொரு பெண் தன் உயிர் இன்றும் நிலைப்பதற்குக் காரணமாக இருக்கின்ற தன் மனைவியின் கற்பை மாற்றான் ஒருவன் சுவைகண்டான் என்று நாக்கூசாது கூறியதும் ஏதோ போலிருந்தது. தான் சாக்கடைக்குள் கிடந்து நீந்துவது போன்ற ஒருவித உணர்வு. எத்தனையோ விதமான கழிவுகள் சேர்ந்து நீரின் விசையால் எற்றப்பட்டுச் செல்கின்றன. அருகில் இருப்போருக்கு அதனால் எவ்வளவு தொல்லை. அத்தகைய ஒரு அசுத்தத்தையா மேரியம்மா சுட்டிக் காட்டினாள்.

சாட்சிகளின் துணையற்ற எதிரியைப் போல் குற்றம் செய்ததா? அல்லவா? என்பதை நிரூபிக்கவே முடியாத ஒரு குற்றமாகக் கற்புச் சூறையாடல் இருப்பதால், அதனை எந்தப் பெண் மீதும் ஏற்றி வாய் கூசாமல் கூறலாமா?

அவன் கேள்வி அலைகளால் மூழ்கடிக்கப்பட்டான். ஜேக்கப் பிறந்த பொழுது ஆண்டவருக்கு ஏதோ குறை வைத்து விட்டதாக எண்ணிப் புழுங்கினான். ஜேக்கப் பிறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர் முத்து மாணிக்கனுடன் தேவையற்றுப் பகைக்க வேண்டி ஏற்பட்டது.

பெண்கள் அழகாகவே இருக்கக் கூடாதா? அழகான பெண்கள் எல்லோரும் ஒருவனுக்கே உரித்தானவர்களாக

வேண்டுமா? அவர்கள் உத்தமிகளாக இருக்க மாட்டார்களா? அவர்களை அணுகாமல் மற்றைய ஆடவர்கள் தவிர்க்க மாட்டார்களா?

"செபமாலைத் தாயே!"

கருங்கடலின் அமைதியான அலைகள் பகல் வேளையில் எம்பினாற் போல் ஒருமுறை எம்பி மடிந்தன. அது நீரின் மேற் கிடந்து கலங்கும் நெஞ்சத்தைக் குளிர்வித்ததா? அல்லது பூமித்தாயின் பொருமலா?

தோமஸ் உறங்கி விட்டான்.

வானம் இருளத் தொடங்கியது. மேற்குப் பக்கமாகவிருந்து கிளம்பி எழுந்த கருமுகில்கள் கிழக்கே குடிவந்த சந்திரனை மூடிமறைத்தன. மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

தோமஸின் உறக்கத்தைக் கெடுப்பன போல் சில மழைத்துளிகள் அவனுடைய முகத்திலும் அப்பாலும் விழுந்து தெறித்தன. துணுக்குற்று எழுந்த அவன் சுற்று முற்றும் பார்த்தான். தன்னை உறங்க வைத்து விட்டு துரோக உணர்ச்சியுடன் யாரோ செய்த தீங்கு அது என்று பிரமித்தான்.

வானத்திலே நிலவைக் காணவில்லை.

அவன் எழுந்து சென்று தோணியின் அணியத்தில் வைத்திருந்த கடகத்துக்குள் கைவிட்டுத் துளாவினான். அதனுள்ளிருந்த மண்ணெண்ணெய் விளக்கை ஏந்தியபடி வந்து தீபம் ஏற்றினான்.

பெருகி நின்ற கடலின் அலைகளில் ஆடிக் கொண்டிருந்த தோணிக்குள் காற்றும் பலமாகவே வீசியது. அந்தத் தீபத்தைக்

காப்பதற்கு அவன் எடுத்த பிரயத்தனம் சற்று அதிகமானதாகவும் கடினமானதாகவும் இருந்தது. மற்றையோருடைய பழிச்சொல்லுக்கும் வறுமைக்கும் மத்தியில் அன்னா என்ற அவனுடைய வாழ்வின் தீபத்தை எவ்வாறு அணையாது காக்கப்பாடுபடுகிறானோ அவ்வாறே அவனது அந்த முயற்சி தோன்றியது.

தோமஸ் மெல்லிய அதே வேளை தளம்பிய ஒளியில் மனைவி வைத்திருந்த சோற்றுப் பொட்டலத்தை எடுத்து உண்டான். கவலைகள் கோடியிருப்பினும் அவற்றை எண்ணி எண்ணி நோவது எவ்வளவு மடத்தனமானது? அதற்காகப் பிராணனை வாட்டி வதைக்க வேண்டுமா என்ன?

அமைதியாக உண்டு கொண்டிருந்தான் அவன். கூடாரம் இடப்படாத அந்தத் தோணிக்கு ஒரு கம்பளியால் கூடாரமிட்டிருந்தான். கம்பளி நனையக்கூடிய அளவு பெய்து விட்ட மழை ஓய்ந்தது. மழை மாத்திரம் என்ன? உலகத்திலே எத்தனையோ சமாசாரங்கள் வந்து போய்க் கொண்டிருக் கின்றன. அதற்காக? நிலவிருந்த வானத்தில் கருமுகில்கள் வந்துவிட்டனவே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? அந்தக் கருமுகில்களும் இப்பொழுது மறைந்து எங்கோ சென்று விட்டன.

வானம் பழையபடி சிரித்தது. நிலவும் சிரித்தது. அந்த எழிலைப் பற்றி தோமஸ் அறியத் துடிக்கவில்லை. மனைவி பக்கத்திலிருந்த அந்த ஆரம்ப நாட்களில் பருவத் துடிப்பில் ஏதாவது உளறியிருப்பான். இப்பொழுது பருவம் இருந்தது துடிப்புத்தான் இல்லை.

தோமஸ் உண்ட களை மாற தோணியின் அடியில் இட்டிருந்த பலகையில் படுத்தான். மேலே இடப்பட்டிருந்த கம்பளிக்

கூடாரத்தை அப்படியே எடுத்து அணியக் கொம்பரில் போட்டான். நிலவின் ஒளியிலும் துணிகள் உலருமா?

வள்ளத்திலே கிடந்த வண்ணம் தோமஸ் தோணி முகப்பின் கீழே தண்ணீர்க் குவளையின் மீது பார்வையை விழுத்தினான்.

வீட்டிலிருந்து முக்கால் மைல் தூரம் நடந்து சென்று தனக்காகச் சுமந்து வந்த தண்ணீர்! காரைவயலுக்குள் யாரோ பொதுச் சொத்தாக வெட்டியிருந்த கிணற்றிலிருந்து நீர் மொண்டு வருவது அந்த மீனவப் பெண்களுக்கு அமைந்து விட்ட வழக்கம்.

தேவன் கோவில் எப்படி இதயதாகத்தைப் போக்குகின்றதோ, அவ்வாறே அவர்களுடைய நீர்த் தாகத்தை அந்தக் கிணறு போக்கி வந்தது.

கடற்கரையின் அருகே அவர்கள் குடியிராதுவிடினும் ஊர்மனைகளில் உள்ள கிணறுகள் உவர் நீரையே கொடுத்துக் கொண்டிருந்தன. கசந்து போன வாழ்க்கையில் வெறுப் புற்றிருக்கும் அந்த மக்களுக்கு குடிநீர் ஒரு கஷ்டமான பிரச்சினையும் கூட.

ஆவரசு மரங்களும் சீமைக்கிழுவை, பூவரசு மரங்களும் அந்தச் சின்னஞ் சிறு கிராமத்திலே அடர்ந்து வளர்ந்திருந்தன. காணுமிடமெல்லாம் அதே காட்சி.

பிற இடங்களிலிருந்து கொண்டு வந்து நாட்டி விட்டது போல் தனியே ஒரு வீட்டில் மட்டும் வெண்முல்லைப் பந்தரும் அதன் கீழே இரு மருங்கும் மல்லிகைக் கன்றுகளும் வைக்கப்பட்டு, தழைத்து மலர்ந்து மணத்து நின்றன.

அதுதான் அன்னாவினுடைய தாய் வீடு. கிராமத்து மக்களுக்கு ஒரு கோயில் எப்படி இருக்குமோ அப்படித்தான் அந்தக் குறிச்சியிலே வாழ்கின்ற ஏழைச் செம்படவர்களுக்கு அவளுடைய வீடும் இருந்தது.

அன்னா கன்னியாக இருக்கும்பொழுது தோமஸ் அவளுடன் "தொடர்பு" என்று பலர் பேசிக் கொண்டனர். உண்மைகளுக்கும் புகார்களுக்கும் எவ்விதத்திலும் சம்பந்தமிருக்கும்.

ஒரு கன்னிப் பெண்ணின் வீட்டை ஓர் இளைஞன் சுற்றி வருவதும், அவளைக் கண்டு, பேசி மகிழ அவன் துடிப்பதும் காதல் மயமானவை. வெளியுலக நடப்பு எதுவுமே அறியாதவர்கள் அந்த மக்கள். அவர்களுக்கு வெளுத்ததெல்லாம் பால்: கறுத்ததெல்லாம் கரித்துண்டு. முந்திரிகைப் பழமும் கறுப்புத்தானே . அப்படியானால் அது இனிக்காது - இது அவர்கள் நம்பிக்கை. ஆதலால் ஓர் ஆணும் பெண்ணும் கொண்டிருக்கும் எத்தகைய தொடர்பும் அவர்கள் சகோதரர்களாக, அத்தகைய உறவினர்களாக இல்லாத பட்சத்தில் அவர்களுக்குள் ஏதோ "சங்கதி" இருக்கிறது என்று முடிவுகட்டி விடுவார்கள்.

அன்னாவுக்கும் தோமசுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதைக் கேள்விப்பட்ட அவளுடைய தந்தை மானத்திற்கு அஞ்சி அவனுக்கே அவளைக்கொடுக்க முன்வந்தார். அவரே ஒரு முறை சென்று கேட்டார்.

"தம்பி! உலகத்திலை எந்தக் தகப்பனும் செய்யத் துணியாததை நான் செய்யிறன். எனக்கு உன்னிட்டை என்ர மானம் போனாலும் கவலையில்லை. ஆனால் உலகத்தட்டை, அதுகும் இந்தத் தீவுச் சனங்களட்டை என்ர மானம் காப்பாத்தப்பட

வேணும். அதனாலை உங்கடை விஷயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன்"

"என்ன சொல்லுறியள்?" தோமஸ் புரியாது விழித்தான். தொடர்ந்து கேட்டான் அவன். "ஊர் உலகம் மானம் என்டெல்லாம் பேசுறியளே. இப்ப மானம் போறதுக்கு என்ன நடந்திட்டுது"

"என்ன? பெம்பிளைப்பிள்ளையின்ரை மானத்தைப் பற்றித்தான் சொல்லுறன் நீ என்ன சொல்லுறாய் மோனை"

தோமஸ் உடல் பதற நின்றான். களிப்பு மயக்கமும் பயமும் சேர்ந்த உணர்ச்சிகளின் கொந்தளிப்பு அங்கு தாண்டவமாடியது. அன்னாவினுடைய குடும்பம் எங்கே? அந்த கிராமத்து மீன் சந்தைக் குத்தகைக்காரர் அவர் தான். அவரைக் கண்டு அனுமதி பெற்ற பின்பு தான் அங்கு எந்த மீனவனும் மீன்களைக் கொண்டு சென்று விற்க விசேஷ அனுமதி பெற வேண்டியிருந்தது.

இதனை மீறுபவர்கள் செம்படவர் சமூகத்திலிருந்தே கழிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு வந்தார்கள்.

அன்னாவின் "தொடர்பு" பற்றிய செய்தி குருவானவரை எட்டிவிட்டது. அவர் தாமாகவே முன்வந்து இந்தப் பிரச்சினையற்ற ஒன்றைப் பிரச்சினையாக கிளறிச் சொல்லும் முன்னரே தோமசுக்கு மாமனாரே விஷயத்தை எடுத்துச் சொல்லி விட்டார்.

"அம்மான்! நீங்கள் எனக்கு முறைப்படி மாமன்தான். ஆனாலும் என்ரை நிலைமையிலை அன்னாவை முடிக்கிறதென்டால் செல்வமாக இருந்தவளை பட்டினி போட்டுக்

கொண்டு போடுவன்.அந்தப் பாவம் வேண்டாம். உங்கடை பணத்துக்கும் அன்னாவின்ரை அழகுக்கும் ஆரும் அவளை முடிப்பான்...."

"உனக்கு அதெல்லாம் தேவையில்லை. நீ என்ன சொல்லுறாய் மோனை? எனக்கு என்ர பிள்ளையின்ரை வாழ்க்கை எப்பிடிப் போகும் எண்டதை விட எங்கடை பரம்பரை மானந்தான் முக்கியம்.

"சரி மாமா!"

தோமஸ் நடுக்கத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

எல்லோரும் எதிர்பார்த்து முடிப்பதற்குள் தோமசுக்கும் அன்னாவுக்கும் திருமணம் முடிந்தது.

கைத்தலம் பற்றியவளைக் கண்கலங்க விடக்கூடாது என்ற ஒரே ஆவல்தான் தோமசை இன்று வரையும் அடிமை கொண்டிருந்தது. தன்னுடைய அந்த அழிக்க முடியாத ஆசையில் தோமஸ் தோற்றான் என்றும் சொல்வதற்கில்லை. அதனால் அவன் எக்கேடு கெட்டாலும் அவளைப் பேணி, போற்றி வந்தான்.

மக்கள் பிறந்ததும் அவனுடைய வாழ்வில் சிறு மாறுதல். பரம்பரை வளர்ந்து, அதைக் கண்டோ என்னவோ அன்னாவின் தந்தையார் இறந்து விட்டார்.

கல்யாணம் நடந்த பொழுது அவர் சீதனம் வேறு கொடுத்திருந்தார். வக்கற்றவனுக்குப் பெண்ணைக் கட்டிக் கொடுத்தார் என்ற குற்றத்தை மனத்தளவில் வைத்து மற்றைய செம்படவர்கள் அவரை வெறுத்தனர். ஒதுக்கி நடந்தும் வந்தனர்.

மீன்களைச் சந்தையில் வைத்து விற்காது தம் எண்ணப்படியே எல்லோரும் நடக்கத் தொடங்கினர். சந்தையை நம்பி அவர் கடனும் பட்டிருந்தார். அவர் இறந்ததும் அந்தப் பெரிய கல்வீடு ஏலத்துக்கு விடப்பட்டது.

குழந்தையின் கையில் இருக்கின்ற தின்பண்டத்தை காகங்களும் கோழிகளும் நாய்களும் பறிக்க முற்படுவது போல் இயலாதவன் என்று கருதப்பட்ட தோமசின் சொத்தாக வந்து சேர்ந்து விட்ட அன்னாவைக் கெடுக்க வேளாளர்களிற் சிலரும் மீனவர்களுள் இச்சை மிக்கவர்களும் எடுத்த எத்தனையோ முயற்சிகளை தோமஸ் முறியடித்தான். அவனுடன் நட்பு என்ற பெயரில் வீட்டில் பழக்கம் ஏற்படுத்திக் கொண்ட செல்லமுத்தனும் தீய எண்ணங் கொண்டவனாக மாறவேண்டுமா?

பிற பெண்களை மனத்தாலே நினைத்தாலும் விபச்சாரம் செய்தவனாகின்றாய் என்ற விவிலியத்தின் அறிவுரையை மறந்தவர்கள் இப்படி நூற்றுக்கணக்கில் அந்த தீவை நிறைத்துக் கொண்டிருந்தார்கள்.

"வீடு தான் போச்சு, மிச்சம் மீதமுள்ள நகைகளுமா போக வேண்டும்?" தோமஸ் புளுங்கினான்.

அவன் நெருப்புக் காய்ச்சலென்று வைத்தியசாலைக்குப் புறப்பட்டான். ஒரு மாதகாலமாகத் திரும்பவேயில்லை.

மோதிரத்தில் மெலிவுகண்டு கரையத் தொடங்கிய பணம் கடைசியிலே தாலிக்கொடிவரையும் தன் கைவரிசையைக் காட்டியது. ஒவ்வொரு நாளும் பெரிய வைத்தியசாலைக்குப் போய் வந்த அன்னா, வழியில் அப்படியே அடைவு கடையிலே நகைகளை ஒவ்வொன்றாக வைத்து விட்டு வந்தாள். கடைசியில் வட்டியும் முதலுமாக சமமாகவே, நகைகளும் வெந்தீசில் விற்கப்பட்டன.

"ஐயோ! பொருள் தான் போச்சு! உங்கடை உடம்பாவது தேறிச்சுதா?" இப்படி எத்தனையோ மறைகளாக அன்னா சொல்லிச் சொல்லி வெந்திருப்பாள். அவனைக் காணும்போதெல்லாம் வாழ்க்கையில் தான் கண்ட தோல்வியின் அதல பாதாளங்களைப் பார்த்துப் பார்த்து மனம் கரைவாள் அன்னா. ஆனால் அவனை என்றாவது ஒரு நாள் வெறுத்தாள் என்பதற்கில்லை.

"பரவாயில்லை அன்னா, நீ என்னை மறக்காமல் வெறுக்காமல் இருக்கிறியே. அது போதும் எனக்கு" அன்பொழுகக் கூறுவான் தோமஸ்.

அவனுடைய முகத்திலே விழி பதித்து நிற்கும் அவள், அவன் தன்மேற் கொண்டுள்ள உண்மையான அன்பை எண்ணி உள்ளூர உவகை பூப்பாள்.

"அன்னா என்னை உதறித்தள்ளிப் போகையில்லை. புறக்கணிக்கவில்லை. என்ரை சுகத்திலை அவளுக்கு எவ்வளவு அக்கறையிருக்குது ... அன்னாவின்ரை நிழலிலைதான் என்ரை இன்பம் ... உயிர் .... எல்லாம்"

"நான்தான் பாவி. என்ன மாதிரி வாழலாம் எண்டு கனாக்கண்டிருப்பாள். அவளடை வாழ்க்கையைப் பாழடிச்சுப் போட்டன்."

"அது தான் போச்செண்டாலும், மனிசனுக்கு வாறதொல்லை... ஒரு பெம்பிளைப் பிள்ளை அதோடை ஐயோ! ஆண்டவரே! அதிலை கிடைக்கிறதை இதிலை எடுத்துப் போட ஒரு பொடியன் ..... தொட்டாட்டு வேலை செய்யிற அளவுக்கு எண்டாலும் இருக்கக்கூடாதோ? கர்த்தர் அதிலையும் என்னைச்

சோதிச்சுப்போட்டார். ஆருதான் அதுக்காக என்ன செய்ய முடியும்."

தோணி இன்பமாக ஆடியது. அவன் நரக வேதனைக்கு மருந்து போல.... அடித்தளத்திலே வந்து உதைத்த நீர் அடிக்கடி புரட்டி விட்டது.

ஏதோ முடிவுக்கு வந்து விட்டவன் போல ஒரு கையை ஊன்றித் தோணியின் விழிம்பில் ஏறிக்கொண்டான். அந்த முகப்பிலே சோற்றுப் பொட்டலத்தையும், தண்ணீர்க் குவளையையுந் தூக்கிவைத்துவிட்டுச் சாப்பிடத் தயாராகினான் தோமஸ்.

மோனப் பெருவெளியில் மறைந்தும், வெளியே வந்தும் மாயாசாலங்கள் காட்டிக்கொண்டிருந்தது நெடுவெண்ணிலவு. அந்தக் குளிர்மையில் அவனுக்கு ஒருவித நிறைவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

அமைதியாக உண்டு கொண்டிருந்தான் தோமஸ்.

# 4

முற்றத்திலே ஒளிப்பிரவாகம் கரைகட்டிப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. வீதியின் ஓரமாக ஓங்கிச் சடைத்து வளர்ந்திருந்த வேப்பமரம் நிலவின் ஒளியின் முழுமையையும் விழுங்கி ஏப்பமிட்டது. அன்னா தன்னுடைய ஜேக்கப்பை மடியிற் சாய்த்து அமர்ந்திருந்தாள். கடலில் தொழிலுக்காகப் போன தன் கணவனுடைய நினைப்பிலேயே அவளுடைய உயிர் உடல் எல்லாம் மூழ்கின.

"இந்த குளிருக்கை... அதுகும் கடலிலை இராராவாக கிடந்துதான் அவர் இப்படி இளைச்சுப் போயிட்டார். மனுசனுக்குக் கஷ்டங்களை விடத் தொல்லை குடுக்கிறது ஒண்டுமில்லை...ம்!"

"அலிஸ்!" என்று குரல் கொடுத்தாள் அன்னா. "என்னம்மா?" என அலிஸ் கேட்கவில்லை. எதையோ மிகச் சிரத்தையுடன் எழுதிக் கொண்டிருந்தாள் அலிஸ்.

தட்டியின் ஊடாக எட்டிப்பார்த்த அன்னாவுக்கு கை விளக்கின் முன்னே அமர்ந்து அலிஸ் எழுதிக் கொண்டிருந்தது தெரிந்தது. "படிக்கிறாள் போலையிருக்கு...... படிக்கட்டும். அவளை எதுக்காகக் கெடுப்பான்?"

மகளின் படிப்பைக் கெடுக்க விரும்பாமல், அவளுக்குச் சொல்ல இருந்த செயலைத் தானே செய்து முடித்தாள் அன்னா.

"பெம்பிளையும் வடிவா இருக்கிறாள். உன்ரை சாதிக்காறங்கள் எத்தனையோ பேர் நல்லா இருக்கிறாங்கள். அவங்களிலை ஒருத்தனைப் பார்த்து இவளைக் கட்டிக் குடுத்தா என்ன?"

அக்கம் பக்கத்துப் பெண்கள் அலிசின் அழகிலும், அடக்கத்திலும் மயங்கி இப்படி எத்தனையோ தடவைகள் கூறினார்கள்.

அன்னா அதற்குச் சொன்னாள்: "ஆயிரந்தான் இருந்தாலும் படிப்பைப் போலை வருமோணை. நான் கூட நல்ல இடத்திலை, பேரும் பணமும் உள்ள அப்பனுக்குப் பொண்ணாகப் பிறந்தன். இப்ப அதெல்லாம் எங்கை? கொஞ்சமாவது படிச்சிருந்தன் எண்டால் கனகசபாபதி யின்ரை மூத்த பெட்டையைப் போலை எங்கினையன் எண்டாலும் படிப்பிக்க மாட்டேனே! அவளோடை நானும் மூண்டாம் வகுப்பு வரை ஒண்டாப் படிச்சனான்."

அன்னாவினுடைய படிப்பினையே அலிசுக்குச் சிறந்த கல்வியாக அமைகிறது என்பதை உணர்ந்த மற்றையவர்கள் மௌனிகளாகச் சென்று விடுவார்கள்.

இளமையிலே செல்வத்திலே ஊறி அன்பின் பிடியிலே மலர்ந்து அமைப்புடன் வளர்ந்திருந்த அவள் உடற்பலம் இன்னமும் குறையவில்லை. படியிலே கிடந்து நித்திரை செய்து கொண்டிருந்த ஜேக்கப்பை நோவாமல் துக்கிச் சென்று படுக்கையிற் கிடத்தினாள்.

"இம்!" என்ற படியே நிமிர்ந்தவள் மகளின் பின்னாலேயே வந்து நின்றாள். அன்னாவினுடைய கண்கள் அலிஸ் எழுதிக் கொண்டிருந்த அழகைக் கண்டு களித்தனவே அல்லாமல் அவள் என்ன எழுதுகிறாள் என்ற ஆராய்சியில் இறங்கவில்லை.

அதற்கு அவளுக்குச் சக்தி ஏது? செல்வத்தை நம்பிக் கல்வியைக் கொடுக்கத் தவறி விட்டாரே அன்னாவினுடைய தந்தையார். அந்தத் தவறைத் தானுஞ் செய்யக்கூடாது என்பதற்காகத்தானே அலிசை இவ்வளவு தூரம் பட்டினம் வரை சென்று படிக்க வைக்கின்றாள். அலிஸ் படிக்க வேண்டும். படித்து, உருக்குலைந்து போகும் தன்னுடைய வாழ்வை, புனருத்தாரணஞ் செய்ய வேண்டும் என்பதற்காகத்தானே அவள் இன்று வரையும் காத்திருக்கிறாள். அதனால்தானே, தான் உடுக்கா விட்டாலும், தன்னடைய ஆசைமகள் நன்றாக உடுக்க வேண்டும் என்று நாளாந்தமாகச் சேரும் பணத்திலே ஒரு பகுதியை மீதம் பண்ணி வைக்கிறாள். அந்தப் பணம் அலிசின் பஸ் பிரயாணம், படிப்பு என்றெல்லாவற்றுக்கும் விரயமாகின்றது.

இது வரையும் எதையோ அமிழ்ந்திருந்து எழுதிவிட்டு பின்புறந் திரும்பிய அலிஸ், தன் பின்னாலேயே அன்னா நின்று கொண்டிருப்பதைக் கண்டு விட்டாள். அவளுடைய மனம் அவளையும் அறியாமல் ஒரு கணம் துணுக்குறத்தான் செய்தது. அதன் காரணத்தை அல்லது எழுதும் விஷயத்தினால் அவளுக்கு உண்டாகப் போகும் வன்மத்தை அன்னா எங்கே அறியப் போகிறாள்.

மனிதன் என்று தன்னை அளவுகோலாகக் கொண்டு உலகத்தை அளக்கிறானோ அன்று பகை, பொறாமை போர் எல்லாமே அழிந்து விடும். அன்னா தன்னை அளவுகோலாகக் கொண்டு மகளை அளந்தாள்.

இளமையின் நிறைவில் பார்ப்பவர் கண்களுக்குப் பொலிவாக இருந்த தன் அங்கங்களையும், செயல்களையும் பிறரின் அந்தப் "பொல்லாத" பார்வையிலிருந்து எப்படித் தன்னையும் – தனதையும்

காக்க முடிந்ததோ, அப்படியே அலிசும் காத்து வருவாள் என்பது அவளுக்கு இருந்த நம்பிக்கை. ஒரு முத்து மாணிக்கம் என்ன, கோடி முத்து மாணிக்கங்களே வந்து மாணிக்கங்களாக அவள் காலடியில் குவித்திருந்தாலும் அன்னா தவறியிருக்க மாட்டாள். செல்லமுத்தனின் அன்புப் பேச்சும், சாதுவான சுபாவமும் அவனை ஒரு "வெள்ளைப் பூனை" என்று பறைசாற்றிக் கொண்டிருந்ததை அவள் நம்பி, தோமஸ் இல்லாத வேளைகளிலும் உபசரித்தாள். அந்த உபசரணை அனுசரணை யற்ற விலங்குத்தனமான நட்புக்கு அழைக்கும் என்று அவள் எதிர்பார்த்தாளா?

எல்லாவற்றுக்குமே இரண்டு பக்கங்கள் உண்டு என்ற தத்துவத்தை அன்னாவுக்கு முதலில் கற்றுக் கொடுத்தவன் செல்லமுத்தன்தான். அன்றைய விபத்திலிருந்து அவள் தப்பித்ததும், மாற்றார் உபசரணை என்பதையே மறந்து போனாள்.

"அலிஸ்! சாப்பிடப் போறியாம்மா?" ....அன்னா கேட்டாள்.

"உம்.." – கனவிலிருந்து விடுபட்டவள் போல இசைத்தாள் அலிஸ்.

கன்னி வாழ்வே கனவுதான். அதிலும் அலிஸ் கல்லூரி மாணவி. கல்வி என்பதன் குற்றகற்றி "அதனை" அனுபவிப்பதையே வகுப்பறையிலும், வெளியிலும் காலத்தைத் தாழ்த்திப் பேசப் பழகி விட்ட அவள் போன்ற மற்றைய மாணவிகளுக்கும் அப்படியொன்றும் வித்தியாசமில்லை. அது ஒரு விதத்தில் தவறுமன்று.

"உன்னை என்னனையாத்தை கேக்கிறன்" அன்னா சற்று முரணாகவே பேசத் தொடங்கினாள்.

"நீ படிக்கிறையாக்கும் எண்ட நினைவிலை நானும் பாத்தண்டு இருக்கிறன். நீ என்னடா எண்டால் உன்பாட்டிலை யோசிச்சண்டு...பேசாமல் இருக்கிறாய்... அலிஸ் நீ இப்ப சாப்பிடவில்லையே! ஐயாவுக்குக் குடுத்துப் போட்டு மிச்சங் கிடக்கு."

"உம்.... கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடுறன்" என்றபடி எதையோ தேடத் தொடங்கினாள் அலிஸ். பின் கடதாசிப் பெட்டியினைத் திறந்து அதனுள் இருந்து ஒரு கடித உறையை எடுத்து, தான் எழுதிய அந்தக் கடிதத்தை அதனுள்ளே திணித்து மூடினாள்.

அலிஸ் எழுந்து வருகின்றாள் என்ற எண்ணத்துடன் குசினிக்குட் சென்றாள் அன்னா. பானையுடன் ஒட்டியிருந்த அடிப்பிடித்த சோற்றைப் போராடி எடுத்துக் கோப்பையில் இட்டபடி "அலிஸ் வாவேன்" என்று அழைப்பும் விட்டாள்.

அலிஸ் நடந்து வந்து ஆசனம் ஒன்றிலே அமர்ந்தாள். அந்தக் காய்ந்து போன சோறு அவளுடைய வாய்க்குள் மனமும் மனம் இல்லாமலும் சென்று கொண்டிருந்தது. அலிசினுடைய கண்கள் உவட்டு நிரம்பி, புகையாலே கறுத்திருந்த கூரையைக் கவ்வின. அங்கே அவளுடைய மனக்கண்ணில் அவளுக்கு எழிலான ஒருவம் ஒன்று தோன்றி, அவளைப் பார்த்துக் கண்சிமிட்டி மறைவது போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது. அவளின் அடிமனதிலே சுரந்து கொண்டிருந்த இன்ப வேட்கை அவள் உண்ட சோற்றுக்குத் தேனாகப் பாய்ந்தது. பழைய குழம்பும் கருகற் சோறும் கசந்த உணர்வு மாற அவள் கண்களை மெல்ல மூடி எதனையோ தியானித்தாள்.

"நீ சட்டை தைக்கிறதெண்டியே... தைச்சுப் போட்டியே?" அன்னா கேட்டாள்.

"துணிக்குக் காசில்லை... பேசாமல் விட்டிட்டன்" முகத்தை ஓரமாகத் திருப்பிக் கொண்டே கூறினாள். அவளுடைய காதுகளிலே கிடந்த தோடுகள் அன்னாவைப் பார்த்துச் சிரித்து விளையாடின. அது ஏளனமாகவிருந்தது.

ஏழ்மையைக் காட்டாது எளிமையுடன் வாழ நினைத்து, அதன்படியே கடைப்பிடித்து வரும் அன்னாவுக்கு அது என்னவோ போலவிருந்தது. அலிஸ் கூறிய அந்த வார்த்தைகளைச் சகிக்காதவள் போல அன்னா அந்தரப்பட்டாள். அன்னா சொன்னாள். "நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போகையிக்கை சொல்லு அலிஸ்... சீட்டுப் பிடிச்ச காசிலை நாலு ரூவா வரவேணும். அதை வாங்கித் தாறன். நீ சட்டைத் துணியை எடு."

அன்னாவின் மனம் அவள் மகள் புத்தாடைகள் அணிந்து புதுக்கோலத்தில் மகிழ்ச்சியாக இருப்பதை எண்ணித் துடித்தது. அலிசை ஒரு முறை சுற்றி வந்தது. அலிஸ் அணிந்திருந்த அந்த மேற்சட்டையும், முழந்தாள்வரை நீண்ட அரைப்பாவாடையும் உரிய உரிய, இடங்களில் நிற்காது பிரிந்து கழன்று நின்றன. ஒற்றைப் பின்னின் பாதுகாப்பில் இருந்த அவளது மேற்சட்டை அதற்குள் இருந்த அழகுப் பொருள்களை யாருடைய கண்களுந் திருடக் கூடிய முறையில் தெரியக் காட்டி நின்றன. விட்ட இடத்தில் நிற்காது எங்கோ ஏதோ இரகசியமாக உள்ள ஓர் இடத்தை மட்டும் அப்படியே முற்றுகை இடுவது போன்று அந்தப் பாவாடை சுருங்கி, தொடைமீது ஏறி ஒய்யாரமாக விருந்தது.

அன்னாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன அலிஸ் ....நீ வர வர மோசமாப் போறாய் போலை கிடக்குது, உதென்ன கோலம்? உனக்கு இன்னுமின்னும் புத்தி சொல்ல வேணுமோ? ஆரன் உன்ரை கோலத்தைப் பாத்தாங்கள் எண்டால்

உன்னைப்பற்றி என்ன நினைப்பாங்கள். பூட்டு பெட்டை சட்டையை...அவவும் அவவின்ரை பாவாடையும். நான் மட்டும் சொல்லிப் போட்டன். உப்பிடிப் பாவாடை சட்டை தையாதை" அன்னா கடிந்து கொண்டாள்.

விளக்கின் மெல்லிய ஒளியில் மினுங்கிக் கொண்டிருந்த அலிஸின் கழுத்துச் சங்கிலி, கைக்காப்புகள் யாவற்றிலுமே அன்னாவினுடைய முழுக் கவனமும் பதிந்திருந்தது.

தன்னுடைய வார்த்தைகளை அசட்டை செய்கிறாள் அலிஸ் என்ற முடிவுக்கு அன்னா வர நெடுநேரம் பிடிக்கவில்லை.

"வயசு வந்த பிள்ளையள்.... தன்னைத்தான் பாதுகாக்க வேணும். அதிலும் நீ ஒரு வேதக்காறப் பெண். உனக்குக் கட்டுப்பாடுகள் கனக்க இருக்கு. நீ பிழைச்சுப் போனை எண்டால் உன்னை ஒருத்தனுமே தேட மாட்டாங்கள்....."

"என்னை ஒருத்தனும் தேடவேண்டாம். என்ரை வேலை எனக்குத் தெரியும்....." என்றபடி எகிறி விழுந்து வெளியே போனாள் அலிஸ். அவள் அமர்ந்திருந்ததுண்டுப் பலகை எற்றுண்ட வீச்சில் "டாங்" கென்று பின்புறமாக விருந்த சருவக் குடத்துடன் மோதி அடங்கியது.

அன்னா முகத்திலே விரல்களைப் புதைத்து அப்படியே இருந்தாள். பின்னர் அடுப்பிலே வெந்து கொண்டிருந்த நீரைத் தேநீராக்கிப் பருகிவிட்டு, படுக்கச் சென்றாள்.

அந்தச் சின்னஞ் சிறு குடிசையிலே மூன்று உயிர்கள் தூக்கத்திலிருந்தன. ஆனால் பரந்திருந்த கருங்கடற் பரப்பிலே தன்னந் தனியே அமைதியற்ற நிலையில் ஓர் உயிர் கிடந்து மாளாத அவஸ்த்தைப் பட்டுக் கொண்டிருந்தது.

# 5

"இந்த வருஷத்தோடை அலிசின்ரை படிப்பும் முடியுது! இனி? ஆண்டவரே!......"

தன்னுடைய எதிர்கால வாழ்வின் அடித்தளம் அலிஸினாலேயே போட்டுத் தரமுடியும் என்று எண்ணியது தோமஸின் மெலிந்து போன அந்த உள்ளம்.

"அலிஸ் கட்டாயம் பாஸ் பண்ணுவாள். ஒன்பதாம் வகுப்பு முடிஞ்சால் எங்கையன் எண்டாலும் வேலை கிடைக்கும். சம்பளம் எடுத்து ஜேக்கப்பையும், அவளுடைய அம்மாவையும் அலிஸ் காப்பாத்தினாள் எண்டால் போதும். நான் நிம்மதியாகக் கண்ணை மூடிப்போடுவன்"

"இந்தப் பஞ்சம் பிடிச்ச நாட்டிலை வேலைக்கு வேறை பஞ்சம்... அரசாங்கமும் அப்பிடித்தான். ஆற்றையன் காலைக் கையைப் பிடிச்சாத்தான் ஒரு மாதிரி ஏதாவது வேலை எடுக்கலாம்... அதுக்கும் நமக்கு ஆரு இருக்கினம்? கர்த்தர்! அவருக்கு அடுத்தாப்போலை சுவாமியார். அவரைப் பிடிச்சு எப்படியெண்டாலும் செய்விக்கலாம்..."

"நேசி வேலை பாக்கலாம் எண்டால்.... இந்த அறுந்த சனங்கள் சும்மா வாயை வைச்சண்டு இருந்தாத்தானே? நேசி வேலை வேசி வேலை எண்டு "பைபிள்" எல்லா படிக்கிறாங்கள். சே! மானத்தோடை ஆராவது வாழ்ந்தாலும் எங்கும் இதே பேச்சுத்தான். ஊர்தேசம் விட்டு ஒரு பெண் பிரசு வேலை பாக்கப் போயிட்டாள் எண்டால், பொறாமை பிடிச்ச சனங்கள், பிள்ளை ஒண்டோட திரும்பி வருவாள் எண்ணுதுகள்."

"எவங்கள் எதைச் சொன்னாலேன்ன! ஆமான பிள்ளையாகப் பெம்பிளை இருந்தாப் போதும், தன்னைத் தானே பேணிக்காத்துப்போட்டாள் எண்டால் போதும். கர்த்தர் அவளுக்கு ஒரு பழியையுங் கொடுக்க மாட்டார்....."

"என்ரை பிள்ளை நல்ல பிள்ளை தானே! இந்தாப்பார் படிக்கிது! பட்டணத்திலை படிக்கிற பிள்ளை. ஒரு கெட்ட பழக்கம் இருக்குதா? அவன் தான் .... மரியாம்பிள்ளையடை பெடிச்சிப் படிக்கிறாள் படிக்கிறன் படிக்கிறன் எண்டு போட்டு ஆரோ எவனோடையோ ஓடிப்போட்டாளாம். அந்த மனுஷன் சாகிறான். பந்தையம்பிடி எண்டல்லோ நிண்டான். அவனுக்குப் பெரிய அவமானம்.... மனுஷன் என்னமாதிரி வாடிப்போனான்."

"எட! நம்ம தலைவிதி! நானமாவது நிம்மதியாக இருக்க உழைப்புப் பிழைப்பாவது இருக்காதா? எதோ கடமைக்காக வலையைப் புதைக்கிறேன்... ஒவ்வொரு நாளும் வந்தும் போறன். என்ன பலன்? அதோடை இப்ப மூண்டு நாளா என்ரைபாடு ...ஐ...ய்...யோ!"

தோமஸினால் தன்னுடைய நிலையைப் பொறுக்க முடியவில்லை. எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை. அடிவயிறு உலர ஒண்டிக் கட்டையாகவேனும் வாழ்ந்திருந்தாலும், அவன் அவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க மாட்டான். வாழ்விக்க வேண்டிய ஒரு பெண் .... வரவு பார்த்திருக்கும் மனைவி. கைகளையே விழி வாங்காமல் எதற்கும் எதிர்பார்க்கும் சிறுவன். அவனால் ஒரு வழிக்கும் வர முடியவில்லை. நினைவு போன இடமெல்லாம்அவனும் சென்றான். அந்த இன்பத்திலே கண்களை மூடிக்கொண்டான் தோமஸ்.

பஞ்சு மெத்தை இல்லாது விட்டாலும், மாம்பலகை அவனுக்கு நீட்டி நிமிர்ந்து படுக்க உதவியது. பக்கத்திலேயிருந்து

பாட்டுப்பாடி மகிழ்விக்க மனைவி இருக்காது போனாலும், அலைகளின் உராய்விலே ஆடிக்கொண்டிருந்த தோணி அவனுக்குச் சுகத்தை அளித்தது. கருமுகிலின் இருள், கடலிலே பரவுவது கண்டு விர்ரென்று பறந்து செல்லும் சில பறவைகளின் இறகடிக்கும் ஓசை அவனுக்குச் சாமரை வீச, அவை எழுப்பிய கீதங்கள் இன்னிசை பாட, அந்தக் கடற் பரப்பிலே, தனிக் காட்டு ராஜாவாக நித்திரை செய்து கொண்டிருந்தான்.

அழகு நிலாவின் ஒளி வெள்ளம் வற்றத் தொடங்கியது. மங்கிய நிலவினைக் கலைத்து, அவனிடத்தேயுள்ள பொன் வண்ணத்தை ஒளிக்கதிர்களில் தோய்த்துப் புதுமை மெருகிடத் தொடங்கினான் பகலவன்.

காலையிளம் கதிரின் கோலமிடும் கதிரலைகள் தோமஸின் கண்களுக்கு அளப்பரிய காட்சியாக இருந்தன என்று சொல்ல முடியாது. ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றமாக மனிதனுடைய வாழ்க்கை போய்க் கொண்டிருந்தால் அமைதி எங்கே? அழகு எங்கே? யாவும் அழகின் சலனங்கள் என்பதைத் தவிர அவனால் எதையுமே எண்ணிப் பார்க்க முடியவில்லை.

கடல் வற்றாவிட்டாலும், அலைகளைப் புரட்டி மனிதன் வாழ்கிற தரையைத் தாண்டத் தவியாய் தவித்துக் கொண்டிராது விட்டாலும் – வீணை வாசிக்கும் மங்கை ஒருத்தியின் விரல்களின் மெல்லிய அசைவு நீரிலே இருக்கத்தான் செய்தது. அதற்கு மேலாக "கலீர் கலீர்...." என்ற சதங்கையொலி அங்கு கேட்கவே செய்தது.

தோணியிலிருந்து கடலுள் இறங்கி நடந்தான் தோமஸ். நீரைக் கிழித்து அவனுடைய கால்கள் நடக்கும் பொழுது, எதிர் வந்த அலைகள் அவனை மோதின.

அலைகள் எம்மாத்திரம்?

தோமஸ் வலைகள் முழுவதையும் தேடிவிட்டான். வலைகளின் கண்கள் போல அவனுடைய உள்ளம் துளைக்கப்பட்டு விட்டது. நம்பிக்கை பிறப்பதற்கு மேலும் இடமில்லை என்பதை உயர உயர ஏறிக் கொண்டிருந்த சூரியன் சொல்லாமற் சொல்லிக் காட்டினான். அவனுள் இருந்த அவனது தன்னம்பிகையை, நேற்று மாலை நிரை வகுத்து ஓடிச் சென்ற வள்ளங்கள் திரும்பிக் கொண்டிருந்தது இழக்கச் செய்து விட்டது. அந்த இலைஞர் கூட்டம் "ஏலேலோலம்" பாடியது தோமஸினுடைய காதுகளிலே வேர் முனையுள்ள மீன் குத்தும் கம்பிகளாலே தாக்குவது போலவிருந்தது.

கையிலே இருந்த தூக்குப் பறியைப் பார்த்தான் தோமஸ் அவனுடைய நாடி ஒடிந்து விழுந்தது. வியாபாரத்துக்கு இல்லாமல் கறிக்கு மட்டுமே போதுமான அளவுடையதாக இருந்தன அதனுள்ளே கிடந்து துடித்துக் கொண்டிருந்த மீன்கள்.

அவனால் மேலும் பொறுக்க முடியவில்லை. பலங் கொண்ட மட்டும் கடலலைகளைப் பிளந்து நடந்து கொண்டிருந்தான். வள்ளம் அவனை நோக்கி ஆடி, ஆடி வந்தது.

தோணிக்குள்ளே பறியை வைத்து விட்டு, கையிலேயிருந்த கம்பியுடன் வள்ளத்தையும் சேர்த்துப் பற்றி இழுத்துக் கொண்டே அலைகளை எதிர்த்து நடந்தான் தோமஸ்.

வலையிற் கிடைக்காத செல்வம் வழியிற் கிடைக்கவா போகிறது? அதைத் தோமஸ் அறியவில்லை. நம்பிக்கையின் பாதையில் நடந்து கொண்டிருந்தான் அவன்.

"முந்தியெல்லாம் எப்பிடி கருவாடு போட்டு கண்டி குருநாகல் எண்டு அனுப்பியிருப்பன். இப்ப என்னடா எண்டால் ஒரு பத்து றாத்தல் மீன் கிடைக்குதில்லை... எல்லாம் காலம்..."

சிறிது தூரம் கரையை நோக்கி வள்ளத்துடன் வந்து கொண்டிருந்தான் தோமஸ்.

"ஐ...ய்...யோ!" என்று பெரிதாக அலறினான் தோமஸ். வாழ்க்கையின் பயங்கர முடிவுகளைக் கண்டு பயந்த போன பேதையின் ஓலம் போலக் காற்றிலே மிதந்தது அவனுடைய அந்த அலறல்.

அவனுடன் சேர்ந்து அலைகளும் அழுதன.

அடியற்ற மரம் போல .... பாய் மரம் முறிந்த கப்பல் போல.... குடை சாய்ந்தான் தோமஸ். அவனடைய கைகளிலேயிருந்த மண்டா கடலினுள் அமிழ்ந்தது. ஒரு கை தோணியைப்பற்றியிருந்தது. தவறிக் கடலுள் விழாமல் தத்தளித்தபடி தோணிக்குள் பாதிவரை ஏறினான் தோமஸ். கால்கள் வெளியே நீரில் மிதக்க பாய்மரம் நடுவதற்காகத் தோணிக்குள் குறுக்காகப் பொருத்தப்பட்டிருந்த பலகையில் அவன் குப்புற சாய்ந்ததும், அவனால் மேற்கொண்டு ஒன்றுமே செய்ய முடியவில்லை.

தூரந் தொலைவில் தெரிந்த தென்னை மரங்களுக்கு மேலே தெரிந்த நீல வானமும், அதனை விழிபிதுங்கிப் பார்த்தபடி தவங்கிடக்கும் வெண் மணல் மேடும் அவன் மங்கிக் குறுகும் கண்களுக்குத் தெரிந்தன. கடற்கரையில் மீனவர் குழாமின் வள்ளங்கள் கம்பத்தில் கட்டிய குதிரைகளின் கெம்பிய

தன்மையுடன் அலைகளால் முட்டுண்டு அங்குமிங்கும் அணியத்தைத் திருப்பிக் கொண்டு நின்றன. சூழ நின்ற சில குடிமக்களுக்கு மீன்களை விற்று, பணத்தை வாங்கி சாரத்துக்கு ஏற்படுத்திய கொய்யகத்துள் கணக்கு பாராமலே திணித்த படி நிற்கும் தனது சக தொழிலார்களை தோமஸ் நினைவால் கண்டு கொண்டான்.

கரையை நெருங்கிக் கேட்ட இரைச்சலும், அது எனக்கு? இது உனக்கு! என்ற அரவமும் அவனுடைய காதைக் குடைந்தன.

தோமஸினுடைய கண்கள் இமைக்குள்ளே சொருகிக் கொண்டன.

அவனுடைய வலதுகை காலைப் பற்றிப் பிசைந்து கொண்டிருந்தது. உள்ளங்காலில் ஓங்கி மண்டாவாற் குத்தியது போன்ற பெரும் காயம் ஏற்பட்டிருப்பது நடுங்கி விறைத்திருந்த அந்தக் கைக்குத் தெரிந்தது. காலில் இருந்து இரத்தம் பாய்ந்து கடல் நீருடன் கலந்தது.

எதையோ முனகியபடியே, கண்களைத் திறந்து, காலை முடக்கிப் பார்த்தான் தோமஸ்.

"திரு....க் .....கை!"

அவன் அலறி விட்டான்.

தன் வாழ்வுக்கு அது முடிவு கட்டி விடுமோ என்று அஞ்சியது அவனுடைய உள்ளம். அலறல் தந்த பேரதிர்ச்சி

தோமஸினடைய அறிவை மயக்கி விட்டது, நிலையிழந்த அவனுடைய மனம் சாந்தியடைந்தது போல.....

கால்கள் கடல் நீரிலேயே கிடக்க, தோணியின் குறுக்காகப் போடப்பட்டிருந்த பலகையிலே சுமக்க முடியாத சுமைதாங்கியான நெஞ்சத்தை வைத்துச் சாய்ந்து விட்டான் தோமஸ்.

கடல் அலைகளின் எற்றலிலே வாழ்வில் அனுபவிக்கக் கூடாத பல இன்னல்களை அனுபவித்து விட்ட தோமசைச் சுமந்து கொண்டு, ஆடி அசைந்து கொண்டிருந்தது தோணி.

# 6

பொழுது உச்சத்தை அடைந்து விட்டது.

சூரியனின் தகிப்பிலே இருந்த வேகம் அன்னா வினுடைய மென்மை உள்ளத்தை மென்மேலும் கருக்கிக் கொண்டே யிருந்தது.

காலையிலே எழுந்ததும் அலிஸ் பாடசாலைக்குப் போவதற்கான அடுக்குகள் யாவற்றையுஞ் செய்து கொடுத்தாள் அன்னா. பின் ஜேக்கப்பை நீராட்டி, உடை மாற்றிக் கடையிலே அவனுக்கு மட்டுமே என வாங்கி வைத்திருந்து அப்பத்தைக் கொடுத்து, அவனுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டி ருந்தாள்.

வெய்யிலின் சூட்டு உணர்வு அன்னாவை தோமஸின் வரவை எதிர்பார்க்கச் செய்து விட்டது.

பிரிவின் அமைதியிலே "வருவார்! வருவார்! வருவார்!" என்ற நம்பிக்கையின் தெம்பிலே இதுவரையும் இருந்தவளை தோமஸ் வரவு தராமல் இருந்தது ஏங்கச் செய்தது. அவள் முற்றத்திலே நிழல் தேடி ஓடிக் கொண்டிருந்த புழுவைப்போல, அவதிப்பட்டாள். வெய்யிலின் புழுக்கந் தாளாமல் வேப்பமர நிழலைப் பார்த்து ஓடியது அந்தப்புழு.

அன்னா, தன் வாழ்வின் நிழலைத் தேடி ஓடத் தொடங்கி னாள்.

முதல் நாள் மாலை களங்கட்டி வலைபுதைத்த எவனும் மறுநாள் பதினொரு மணிக்கெல்லாம் எப்படியும் சந்தையும்

முடித்து வீட்டுக்கு வந்து விடுவான். ஆனால், தோமஸ் என்றுமில்லாதவாறு இன்று காலந் தாழ்த்துவது அன்னாவுக்கு பயங்கரமான சந்தேகங்களைக் கொடுத்தது.

முத்துமாணிக்கம் இரவு வருவதாக் கூறிச் சென்றவன் தோமஸ் கடலுக்குச் சென்று விட்டான் என்று தெரிந்ததும் இராத்திரி வேளை இடைஞ்சல்களை ஏற்படுத்துவானோ என்று அஞ்சி இரவு முழுவதும் தூக்கமின்றி கிடந்த அன்னாவின் கண்கள், சூரியனின் ஒளிப்பிழம்புகளைப் பார்க்கச் சக்தியற்று எரிந்து கொண்டிருந்தன.

இரவு கர்த்தரை அவள் வேண்டியவாறே சங்கட நிலைமை ஒன்றமே உருவாகவில்லை. "ஒரு வேளை!" அன்னாவின் கட்புருவங்கள் சுருங்கின.

"..... முத்துமாணிக்கன் அவருக்கு ஏதும் தீங்கு.... ஐ..ய்...யோ" அழுதபடி ஒரு பக்கம் முகந்திருப்பி, இடுப்பில் இருந்த ஜேக்கப்பை இறுகப்பற்றினாள் அன்னா.

ஏறி எரிகின்ற வெய்யில் ஜேக்கப்பினுடைய முகத்தில் விழாதிருக்க வேண்டுமென்பதற்காக தன்னுடைய முந்தானையால் அவன் தலையைப் போர்த்தியிருந்தாள் அன்னா.

அன்னா கடற்கரைக்கு வந்து விட்டாள்.

ஆனால் தோமஸ் இன்னமுங் கரைக்கே வரவில்லை. அலைகள் அலைத்த அலைப்பிலே சென்று கொண்டிருந்த ஓடம் அவனை அந்தக் கிராமத்தின் வடமுனைக்குக் கொண்டு போய் விட்டிருந்தது. சோளகக் காற்றின் கைவரிசைதான் அது.

தோமஸினுடைய முகம் கருவாடாகியிருந்தது. காலில் ஏற்பட்ட காயத்தைச் சுற்றி மட்டும் சிறிது கசிவு இருந்தது. ஆனால், அவனுடைய இரத்தம் பாய்ந்திருந்த இடமெல்லாங் காய்ந்து, முறுகியிருந்தன. அவனுடைய பரிதாபகரமான நிலையை அந்த ஓடமும் "எண்ணிப்பார்க்கவும்" இல்லை. என்றும் போல அசைந்து சென்றது. சுழன்றது, திரும்பி ஊர்ந்து கொண்டேயிருந்தது. கடைசியாக மானோடை என்கின்ற ஒரு திரும்புகரையிற் பொறுத்து அசைய முடியாது பொறுத்தது அந்தத்தோணி.

அன்னாவினுடைய எண்ணங்கள் அந்தக் கடல் அலைகளைப் போலவே அடிக்கடி தோன்றின, பொங்கின, புரண்டன, பின் மடிந்தன. கடலிற் பொங்கிப் புரளும் அலைகள் கரையை அடைந்தன. ஆனால் அன்னாவின் நினைவுத் திரைகள் ஓய்வு பெற கரை எங்கே? முடிவு எங்கே?

ஓ! வாழ்க்கையின் ஓரமாகத் தான் அது இருக்க வேண்டும்.

அடிக்கடி நிலைமாறும் உள்ளத்தைத் திடப்படுத்தி 'அவர் கட்டாயம் வருவார்' என்ற நம்பிக்கையை அதில் ஊன்றி விட்டாள் அன்னா. நிலைமாறித் தடுமாறும் அன்னா வினுடைய கால்கள் அவன் வரவேண்டிய கடற்பகுதியை விட்டு, வடபுறமாகச் சென்று கொண்டிருந்தன.

கிழக்கு முகமாகக் கடலைப் பார்த்த வண்ணம் நோக்கும் கண்களும், வடக்கே யாழ்ப்பாணத்தை நோக்கித் தள்ளாடி அசையும் கால்களும், கொதிக்கும் வெய்யிலில் தவிக்கும் உடலும், வேகும் மனமும், சிந்தும் கண்ணீரும், இடையிடையே ஜேக்கப்பினுடைய தலைப்போர்வை காற்றினால் எற்றுண்டதும் அதைத் தாவிப்பிடித்து மறுபடியும் அவனுக்கு வெய்யிற் பிடிக்காது செய்யும் கைகளும் இயங்க.....

அன்னா போய்க் கொண்டிருந்தாள்.

பீச் றோட்டிலிருந்து, கடற்கரையோரமாக கடலையே பார்த்த வண்ணம் இருக்கும் கண்ணகை அம்மன் கோவில் வரைக்கும் அன்னா வந்து விட்டாள்.

சடைத்திருந்த புங்க மரங்கள் அந்தச் சின்னஞ்சிறு கோயிலின் கட்டிடங்களுக்கு ஆறுதலாகத் தம் கிளைகளால் சாமரை வீசிக்கொண்டிருந்தன. புங்கங் கிளைகள் கடற்கரைக்கும் கோயிலுக்குமிடையே அமைந்திருந்த உப்பங்கழி வெளியில் வந்து கொண்டிருந்த அன்னாவை வா! வா! என அழைப்பன போல ஆடின.

அன்னா கோவிலைப் பார்த்தாள்.

"தாயே பராசக்தி!" அவளுக்கு விம்மல் பொருமி வந்தது. வார்த்தைகள் சரியாக வெளிவராது, தொண்டை கம்மியது.

"கண்ணகையம்மா! நீ படாத பாடு தாயே நான் படுகிறன். என்ரை குடும்பத்துக்கு ஏன் இவ்வளவு சோதனை? மரியாயே! என்னை ஏற்றுக் கொள்ளுங்களேன்!...... ஐ...ய்....யோ! தாயும் இல்லை. தகப்பனும் இல்லை.... புருஷனையும் காணோமே! துணைக்கு இந்த உலகத்திலை எனக்கு ஆருமே இல்லையா?......"

அந்தத் வெளியில், யாருமே அற்றதாக இருக்கக் கூடிய அந்த உச்சி வெய்யில் வேளையில், வாய்விட்டு மனம் விட்டு சொல்லிப் பெரிதாக அழுதாள் அன்னா.

"ம்மா!" என்ற ஜேக்கப்பின் முனகலும், அவளுடைய தாடையைப் பற்றிய அவனது பிஞ்சுக் கைகளும் அன்னாவினுடைய கசிவை மேலும் சிதறடித்தன.

"ஜே....க்...க....ப்! என்ர மகனே! என் செல்வம்! அம்மாவுக்கு நான் இருக்கிறன் எண்டு சொல்லிறியாப்பு ஹோ......!"

ஜேக்கப்பை அள்ளி நெஞ்சோடு இறுக அணைத்தாள் அன்னா.

அவள் கண்களை துடைத்துக்கொண்டு மேலும் தொடர முனைந்த பொழுது கரியம்பன் என்ற இடத்திலிருந்து, கண்ணகையம்மன் கோவிலைப் பார்த்து முத்துமாணிக்கன் வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

அவளுக்குத் திக்கென்றது!

அன்னா தனது இடுப்பிலிருந்த ஜேக்கப்பை அந்தப் புல் தரையில், தன் கால்களுடன் சாய்த்து இருத்தி விட்டு, தனது ஆடையை மளமளவென களைந்து, பின்னிருந்த கொய்யகம் யாவற்றையும் மறைத்து மட்டி பொறுக்க வரும் பெண்களைப் போல் மொட்டாக்கிட்டு, அந்த மொட்டாக்கின் உள்ளே ஜேக்கப்பையும் இருத்தி, விறுவிறென கடலை நோக்கி நடந்து, கடற்கரை நெடுக, தோணி எங்காது தெரிகிறதா என நோட்டம் விட்டாள்.

பற்றைகளுக்கு நடுவே அன்னா நின்று கொண்டு, கடலில் தன் கணவன் நிற்கிறாரா என்று பயங்கலந்த கண்களால் பார்த்தாள். திடீரென்று கண்ணகை அம்மன் கோவில் பக்கமாக முத்துமாணிக்கனையும் பார்த்தாள்.

வடக்கேயுள்ள கள்ளுக் கொட்டிலில் காலையிலிருந்து குடித்து விட்டு, அப்பொழுதுதான் அவன் வீடு போய்க்

கொண்டிருக்கிறான் என்பதை யோசிக்க அவளுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. முத்து மாணிக்கன் பொல்காவலைக்குத் திரும்பப் போகும் வரை, கொட்டில்களில் கள்ளும் இருக்காது. வீதிகளில் பெண்களும் நிற்கமாட்டார்கள். அவனுடைய மனைவி அவன் புறப்பட்ட நாளிலிருந்து, திரும்பி வரும் வரை உள்ள நாட்களில் பாதியை நோ எண்ணெய் வாங்கி அதனை தன் மெல்லிய மேனியில் கண்ணீரால் தடவுவதில் செலவழிப்பதும் ஊரறிந்த விஷயம்.

முத்துமாணிக்கன் தன்னை வெகுவாக அடையாளம் கண்டு கொண்டு விட்டான் என்பதை அன்னா தெளிவாக உணர்ந்தாள். அவன் ஊர்மனையை விட்டு, கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருப்பது அவளுக்கு என்னவோ நினைவுகளையெல்லாம் ஏற்படுத்தியது.

"ஆண்டவரே!" அன்னா முனகிக் கொண்டாள். இப்பொழுது செக்கச் சிவப்பேறியிருந்த அவளுடைய கண்கள் பலமான தடி தண்டு கிடைக்காதா என்று தேடின.

மிக நெருக்கமாக அடர்ந்திருந்த ஆவரச மரங்களுக்கு நடுவே கம்பீரமாக உயர்ந்து, அன்னாசிப் பழத்தின் பொய்க்கோலத்தைக் கொண்ட காய்களை தொங்க விட்டிருந்த கடல் தாழைகள் அவள் கண்களை நிறைத்தன. அவற்றுள் ஒன்றின் அடியில் அமைந்த மணற் பரப்பில் யாரோ மறைத்து வைத்திருந்த வலைக் கம்புகளைக் கண்டதும் அவளுக்குத் தெம்பு வந்தது.

முத்துமாணிக்கன் போன்ற நபர்களுக்கு இந்த மண்ணில் தேவைப்படுவது என்ன என்பதை அவளுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

முத்துமாணிக்கன் வந்து விட்டான்.!

"ஹே! அன்னாம்மாவா? அதுதானே பார்த்தேன் யாரடா எண்டு!"

முத்து மாணிக்கன் வெறி மிகுந்தவனாக நின்று, சிரித்தான்.

"..................."

அன்னா முத்துமாணிக்கனை ஒரு முறை வெறித்துப் பார்த்து விட்டு ஜேக்கப்பை எங்காவது நிழல் பார்த்து இருத்த தன்னுள் ஆயத்தமாகிக் கொண்டு, சற்று அப்பால் கிடந்த வலைக்கம்புகளைப் பார்த்த வன்மம் ஏற நின்றாள்.

"அன்னா! என்ன இஞ்சாலை?"

"................"

"நான் கேக்கிறன் பேசமாட்டேன் என்கிறியே! என்னைப் பார்த்துத்தானே வந்த நீ!"

"சீக்!"

அன்னா காறி உமிழ்ந்தாள்.

திறந்த வெளியில் அவள் அவன் பக்கமாக உமிழ்ந்தது காற்றின் அலைப்பில் அவனுடைய முகத்திலும் தவலைகளாகப் பட்டது.

"அடி திமிர் பிடிச்சவளே! உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று கறுவிக் கொண்டு, உரிந்து விழப்போன தனது வேட்டியை இறுகப் பிடித்தபடி அன்னாவை நெருங்கினான் முத்துமாணிக்கன்.

"அங்கேயே நில். கிட்ட வந்தாய்! உன் தோலை உரிச்சுப் போடுவன்"

"ஹ ஹ் ஹா! என் தோலை உரிப்பியா? நான் உன் சீலையை உரிஞ்சபிறகுதானே!"

"பொத்தடா வாயை!"

அன்னாவுக்கு ரௌத்திரம் பீறிட்டது. கையிலிருந்த ஜேக்கப்பை அலாக்காக ஆவரச நிழலில் இருத்தி விட்டு பாய்ந்து சென்று தாழை மரத்தடியில் மணல் மேட்டில் கிடந்த வலைக்கம்புகளில் ஒன்றை எடுத்தாள்.

"அ.....ன்....னா!"

முத்து மாணிக்கன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் இது வரையும் அவளுடன் எந்தவித தீங்குணர்வுமின்றி ஏதோ வெறியில் உளறியதாக மட்டுமே தான் சொன்னவற்றை எண்ணிப்பார்த்தான். பின் கூறினான்.

"அன்னா! நீ என்னை அடிப்பியோ, கொல்லுவியோ! இந்த ஜென்மத்திலை உன்னை அநுபவிக்காமல் நான் சாக மாட்டன். நீ எந்தளவுக்கு என்னை வெறுக்கிறியோ, நான் அந்தளவுக்கு உன்னை விரும்புறன். உனக்குச் சம்மதமென்டால் சொல்லு பொல்காவலைக்குப் போய் அங்கேயே குடியிருப்பம். இல்லாட்டி எனக்கு ஒரே ஒரு நாளைக்காவது உன்னைத் தா?"

முத்துமாணிக்கனுக்கும் அன்னாவுக்கும் இடையேயிருந்த தூரம் குறுகியது. அன்னா பற்களை நரும்பிக் கொண்டிருந்தாள்.

அவள் பேசவில்லை.

கண்ணகையம்மன் கோயிலிலிருந்து ஒலித்த பூசை மணியின் ஓசையை கேட்டதும் முத்துமாணிக்கன் திடுக்கிட்டான். முன்னேறிக் கொண்டிருந்த அவனுடைய கால்கள் அப்படியே ஸ்தம்பித்து நின்றன.

அன்னா தன்னையும் அறியாது மெய்மறந்து நின்றாள்.

"தாயே! பராசக்தி"

அவளுடைய அதரங்கள் முணு முணுத்துக் கொண்டன.

"அன்னா! நீ அதிருஷ்டக்காரி! இந்தக் கண்ணகை அம்மாளும் உனக்குத்தான் சப்போர்ட். பறுவாயில்லை பூசாரி வெளியே வாறான் போலை.... நீ எப்பவாவது எம்பிடுவாய் தானே!....."

முத்து மாணிக்கன் கூறிவிட்டு, விடுவிடென ஊர்மனை நோக்கி நடந்தான்.

எகிறி வந்த பெருமூச்சை விட்டபடி, கையிலிருந்த கம்பை கிடந்த இடம் நோக்கி வீசிவிட்டு ஜேக்கப்பை வாரியணைத்துத் தூக்கிக் கொண்டு நடந்தாள் அன்னா.

பசி மயக்கத்திலே சுருண்டு கொண்டிருந்த அவளுடைய கண்களை கண்ணீர் குளிர்வித்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நோட்டம் விட்டாள் அன்னா.

சிறிது தூரத்துக்கப்பால் தோணியொன்று தெரிந்தது. அதனைச் சூழ்ந்து அமைந்தன போல் காணப்பட்ட தாழை மரங்கள் அந்தக் காட்சியிற் பாதியைத் தமதாக்கியிருந்தன. அதனால் அன்னாவினுடைய விழிகள் சுழன்று உண்மைக்காகத் துடித்துக் கொண்டிருந்தன. கால்கள் அவளுக்கு முன்னமாகவே தோணி நின்ற கரையை அடைந்து விட்டன.

தோணியின் மீது தன் கணவன் கிடப்பதைக் கண்ட அன்னாவுக்கு நெஞ்சில் வலித்தது. "கோ!" வெனக் கதறியபடி அருகே ஓடினாள்.

உடலிலே உள்ள இரத்தமெல்லாம் அந்தத் திருக்கைமுள் தைத்த வாசலின் ஊடாகப் போய், கால்களின் படங்களிலே உறைந்து செங்கட்டி பரவியிருந்தது. தோணி விழிம்பையும் மீறி வெளியே மணலிற் புரண்டிருந்த கால்களைப் பற்றி ஒழுங்குடன் வைத்தாள் அன்னா.

அவளுடைய உள்ளமும் உடலும் ஒன்றாகவே நடுங்கின. செய்வது என்னவென்று தெரியாமல் செய்து கொண்டிருந்தாள் அன்னா.

தன்னுடைய முந்தானைச் சேலையை எடுத்து துண்டு கிழிக்க முனைந்தவளுக்கு ஜேக்கப் தடையாகவும், பாரமாகவும் இருப்பது தெரிந்தது. அவனை தோணியின் அடியில் இருத்தி விட்டு, துண்டைக் கிழித் தெடுத்து, புண்வாயிலைச் சுத்தப்படுத்தினாள்.

அவளின் ஸ்பரிசம் பட்ட தோமஸ் மெல்ல முனகினான். அவனுடைய முனகலைக் கேட்ட ஜேக்கப் "ப்பா" என்று தனக்கியன்ற பாணியிலும், தொனியிலும் அழைத்தான். தோமஸிடமிருந்து "ஜேக்கப்பு!" என்ற கனிவான பதில் கிடைக்காததால், ஜேக்கப் மெல்லக் கலங்கத் தொடங்கினான்.

அன்னா இதொன்றையும் கவனிக்கவில்லை.

காய்ந்து கறுத்துவிட்ட வியர்வைக் கறைகள் வெய்யிலில் நன்றாக வரண்டிருந்தன. தோமஸ் கண்களைத் திறக்காமலே தாடையை அசைத்து தண்ணீர் கேட்பவன் போலத் தவித்தான்.

அன்னா துடித்துப் பதைத்தபடி தோணிக்குள் எட்டி அணியத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த குவளையை எடுத்து அவனது வாயருகில் வைத்து கைகளால் மொண்டு நீர் ஊட்டினாள். அந்த நீர் வாய்க்குள் கொள்ளாததால் தாடை வழியே வழிந்து கழுத்தை நனைத்தது.

கண்களிலிருந்து பெருகிய நீர் அவனுடைய முகமெல்லாம் பொல பொல வென்று வீழ்ந்து தெறித்தன. அன்னா தன் முகத்தைப் பணித்து அவனடைய தாடையுடன் சேர்த்து நெருக்கியபடி "என் தெய்வமே! உங்களுக்கும் இந்தக் கதியா?" என்று வீரிட்டாள்.

சரிந்த பாய்மரம் போல கிடந்த அவனை பாய்ச்சேலை போலப் பட படத்த அவள் தோணியில் சரியாகத் தூக்கிக் கிடத்தினாள்.

ஆழமற்ற நீரிலே தோமஸ் தோணியுடன் மிதந்து கொண்டிருந்தான். அவனுடைய முகத்திலே எந்த வித உணர்ச்சியும் இல்லை. ஆனாலும் அன்னா கவலைக் கடலை நீந்திக் கொண்டிருந்தாள்.

வெய்யிலின் அக்கிரமம் தலைதூக்கி ஆடியது. கணவன் சுட்டுக் கொழுத்தும் வெய்யிலில் காய்வதை அவள் உணர்ந்து கொண்டாள். அவளுடைய சேலையிற் பாதி அவனை மூடியது.

அன்னா தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள். அவன் பக்கமாகவே அவளுடைய கண்கள் இருந்தமையால் அவள் காலைப் பதம்பார்த்திருந்த சிப்பியின் செயலை அவள் உணரவில்லை.

இனி அவளுடைய வாழ்க்கை அவனுடைய கையில் தானே? அந்த வாழ்க்கைப் பாதையிலே அவள் எத்தனையோ

அவதூறுகளைக் கேட்க வேண்டுமே! எல்லாவற்றையுங் கேட்டு, பொறுத்து தாங்கிக் கொள்ள அவள் தன்னையே தயார்ப்படுத்தியபடி நடந்து கொண்டிருந்தாள்.

அவள் சேர வேண்டிய கரையும் தேடி வந்து விட்டது போல நெருங்கி வந்து கொண்டிருந்தது. அவள் கரைக்கு வந்து விட்டாள்! ஓ! அவளின் வாழ்க்கையைத் தவிர...

தோமஸ் சிறிது கண்விழித்துப் பார்த்தான். காலிற் பட்ட வெட்டு வேதனைத் தந்து கொண்டிருக்கவே செய்தது. பசி ஒரு புறம் குடலைப் பிடுங்கிக் கொண்டிருந்தது. அவன் மெல்ல அசைந்து புரண்டான். அன்னா தாவிச் சென்று அவனைத் தன் மார்போடு அணைத் தாள். "ஐயோ! என்ரை வாழ்க்கை இப்பிடிப் போகுமெண்டு நான் கண்டேனோ? ஆண்டவரே! செபமாலை மாதாவே! உங்கடை கருணையெல்லாம் எங்கே போச்சு! ஐ....ய்....யோ!....."

அன்னா அழுதாள்.

கண்களிலிருந்து பெருகி ஓடிய கண்ணீர் தோமஸினுடைய தலை மயிர்க் கூட்டங்களைத் நனைத்தது. கடல் நீர் அடிக்கடி படுவதால் பரட்டை விழுந்திருந்த அவனுடைய சிரசத்தில் பாதி நனைந்து கறுத்தது.

அவளுடைய கலக்கத்தைக் கண்ட சோளகக் காற்று பலமாக வீசத் தொடங்கியது. அதன் வீச்சிலே வெய்யிற் சூடு ஓரளவு குறையத்தான் செய்தது.

குலுங்கி குலுங்கி, விக்கி விக்கி அழுதவளைத் தோமஸ் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அந்த அணைப்பிலே அவளுடைய அழுகை மறையத் தொடங்கி, செய்கை யொன்றே இப்பொழுது வேண்டியிருந்தது.

தோமஸின் தோள்களைப் பற்றித் தன்மீது தாங்கிக் கொண்டு அவனைத் தரையை நாடி அழைத்துச் சென்றாள் அன்னா. அவனுடைய நா உலர்ந்து வரண்டு போய் இருந்தமையால் அவனால் எதுவும் பேச முடியவில்லை. தொங்கப்போட்ட கைகள், சிறிது திறந்து காற்றுக்காக விடப்பட்ட வாய்...

தென்னை மர நிழலிலே அவனைச் சாய்த்துக் கிடத்தினாள் அன்னா. பின் தோணிக்குள் ஓடிச் சென்று ஜேக்கப்பைத் தூக்கியபடி, தண்ணீர்க் குவளையையும் எடுத்து வந்தாள். அன்னா கையால் மொண்டு, மொண்டு கொடுத்த நீரை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தான் தோமஸ். அவனுடைய களையிழந்த முகம் ஒளி பெறுவதைக் காணத் துடித்தன அவளுடைய கண்கள். கைகள் நீரை அள்ளி அவனுடைய முகத்தைக் கழுவி விட்டன.

ஜேக்கப் அரைந்து, அரைந்து தோமஸிடம் போனான்.

"அப்பு!" தோமஸ் கனிவோடும், புன்னகையோடும் அழைத்தான். அது யாருக்குமே கேட்காதவாறு சக்தி குன்றி ஒலித்தது.

இரவு முழுவதும் கடலிலேயே காலம் கழித்தமை யினாலும் கடல் நீரில் வேலை செய்தமையினாலும் தோமஸினுடைய உடலெல்லாம் வெண் கொடி படர்ந்திருந்தது. அவற்றைத் தனது ஈரச் சேலையால் துடைத்து விட்டாள் அன்னா.

இவையெல்லாம் செய்த விட்ட அவளுக்கு ஒன்று மட்டும் புரியவேயில்லை. அதுதான் கட்டுப் போட மருந்து எது என்பது.

தன்னுடைய பூரண உறுதியுடனும், பெண்மை நலுங்காத செயலுடனும் தோமசை ஒரு கையால் தாங்கித் தோளில்

சாய்த்தபடியும், ஜேக்கப்பை மறுகையில் அணைத்து இடுப்பில் இருத்தியபடியும் அன்னா நடந்து கொண்டிருந்தாள்.

அவளுடைய கால்கள் பரிகாரியாருடைய வீட்டைக் குறி வைத்து நடந்து கொண்டிருந்தன. அதையறியாமல் தோமஸ் மண்ணிலும் கல்லிலும் தடக்கி திசை தெரியாமற் போய்க் கொண்டிருந்தான்.

பரிகாரியார் தோமஸினுடைய காலிற் பட்ட வெட்டுக்கு மருந்து போட்டார். பின், ஒரு சேலைத் துண்டால் சுற்றிக் கட்டிவிட்டார். பரிகாரியாருக்குப் பணங் கொடுக்க முடியாத நிலையிலிருந்த அவளை ஏக்கத்துடன் பார்த்தான் தோமஸ். அவனடைய நெஞ்சம் உருகியது. எதோ தொண்டைக் குழலை அமுக்கிப் பிடிப்பது போலவிருந்தது. கண்ணீர் கட்டுக்கும் அடங்காமல் பாயத் தொடங்கியதும். பரிகாரி அதைப் பார்க்க முன்னரே தன்னடைய சேலையால் துடைத்து விட்டாள் அன்னா.

"உங்கடை உதவிக்கு என்ன செய்யப் போகிறேனோ தெரியாது. எப்படியும் இரண்டொரு நாளையிக்கை காசை அனுப்பி வைக்கிறன்" என்று சொல்லிக் கொண்டே புறப்படத் தயாரானாள் அன்னா.

"சேச்சே! நீங்க ஆறுதலாக் கொடுங்க. ஒழுங்காக மருந்தைக் கட்ட மறந்திடாதீங்க. நான் தானே இருக்கிறன். என்ன வேணுமெண்டாலும் கேக்கலாம். அவன் மனுஷன் உயிரோடை நல்லமாதிரியாக இருந்தான் எண்டால், நாளைக்கு உழைச்சுப் பட்டுத் தருவான் தானே!"

பரோபகார சிந்தை பரிகாரியாரிடத்திலே கொஞ்ச மேனும் குறைவில்லாமலிருக்கிறது என்பதை அவருடைய வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் ஊர்ஜிதப்படுத்தின.

# 7

அலிஸ் காலையிலேயே பாடசாலைக்கென்று புறப்பட்டவள்தான் திரும்பவேயில்லை. ஏன் என்று அயலவர்களைக் கேட்ட பொழுது தான் உண்மை வெளிப்பட்டது.

விடிந்ததும் விடியாததுமாக எழுந்து சென்றவள், நேரே "கொன்வென்ற்" றுக்காகக் கச்சேரி பஸ் எடுத்துப் போனாள்.

பாடசாலைக்கு முன்பாக அமைந்திருக்கிறது ஒரு சயிக்கிள் கடை. அந்தக் கடையிலே தான் எட்வேர்ட் என்பவன் வேலை செய்கிறான்.

அவன்?

அலிஸ் கொன்வென்றிலே சேர்ந்த சில காலம் முதல் அவனுக்கும் அவளுக்கும் காதல் ஏற்பட்டது.... அழகு மயக்கம் அந்த இருவரையும் பிணைத்தது.

நேரம் போய்க் கொண்டேயிருந்தது. அன்னா தோமஸின் மீதே கருத்தாக இருந்தாள். அவனைப் பாயிற் கிடத்தி அவனுடைய கால்களைத் தன் மடியின் மீது வைத்து உள்ளன்போடு உணர்வூட்டி வருடிக்கொண்டிருந் தாள். அந்த அன்புத் தொடுகையிலே கண்ணயர்ந்தான் தோமஸ்.

"பொழுது இருட்டிப் போட்டுது, என்ன காரியம்? அலிசை இன்னம் காணயில்லை. அவள் வழக்கமாக வாற பஸ் கூட வந்திட்டுதே.....?"

ஏக்க நினைவுகள் அன்னாவை அடிமை கொண்டன. 'அலிஸ் எங்கே?' இந்த ஒரு கேள்வி மட்டுமே இப்பொழுது அன்னாவின் உள் மனதைப் போட்டுக் கொன்று கொண்டிருந்தது.

நன்றாக இருட்டி விட்டது.

ஜேக்கப் தூங்கிக் கொண்டிருந்தான். தோமஸும் களைப்பாலும் உடல் வேதனையாலும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அலிஸ் இல்லாமல் துயிலாத ஜேக்கப் கூட தூங்கி விட்ட நேரம்......

அலிஸ் போய் விட்டாள்!

அலிஸ் இன்னும் வரவில்லை!

அலிஸ் போய் விட்டாள்!

அலிஸ் எங்கே?

தனக்குத் தனியே வாழ்வு தேடிக் கொண்டு போய் விட்டாள்.! சுமையோடு பெற்று சுமையோடு வளர்த்துவிட்ட பெற்றோரை மறந்து அவர்களுக்குத் துன்பச் சுமையைப் பரிசாக அளித்து விட்டு அலிஸ் பிரிந்து விட்டாள்.

எட்வேர்ட் தான் இனி அவளுக்கு வாழ்வு.... சுகம்... தாழ்வு..... துக்கம் - எல்லாமே அவன்தான்! அவன் கைவிட்டாலுஞ் சரி..... காப்பாற்றினாலும் சரி-

எட்வேர்ட்டின் மீது கொண்ட தீராத காதல் அலிசைத் திருகோணமலை வரை அழைத்துச் சென்றது. ஒரு நொடி இன்பம் அவளை அப்படிச் செய்ய வைத்து விட்டது. அதிலே தான் இயற்கையின் தத்துவம் எல்லாம் குழுமியிருக்கின்றன.

இப்பொழுது அவள் எட்வேட்டின் அருகில் அமர்ந்திருப்பாள்... பஸ் ஓடுவதனால் உண்டாகும் குலுக்கம் அவளின் இன்ப வேதனைக்கு வழிகோலிவிடும். அப்பனுக்கு ஏற்பட்ட ஆபத்தை அந்த நரக வேதனையால் தாய் படுகின்ற தவிப்பை அவள் எங்கே அறியப் போகிறாள்?

மதத்திலே ஊறிவிட்ட அந்த சமூகம் அதை மன்னிப்பது வெகு கடினம். அலிஸ் எதற்காகவோ துணிந்து விட்டாள். அதனால் கொம்பர் ஒன்றுடனும் சாய்ந்து விட்டாள்.

இடம் பிரிந்த அந்த காதல் சிட்டுக்கள் சென்று கொண்டிருந்த பஸ் நிறைமாதக் கர்ப்பிணியின் அசைவு வேதனையுடன் முனகியபடி ஓடிக் கொண்டேயிருந்தது.

அலிஸ் எட்வேர்ட்டின் கைமடிப்புக்குக் கீழே, முழுங்கையைப் பற்றியபடி மௌனியாக, கால்களையே வைத்த விழி வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். வெளியே நெடுநேரம் வெறித்திருந்த தன் பார்வையை மீண்டு, எட்வேர்ட் கேட்டான்.

"அலிஸ்"

"உம்!"

"என்ன? இறங்கி ஓடி விடுவேன் என்று பயப்படுகிறாயா? பிடித்த பிடி விடாமல் நிற்கிறாயே!" செல்லமாக, யாருக்குந் தெரியாமல் அவளுடைய இடையிற் சீண்டினான் எட்வேர்ட்.

செக்கச் சிவந்த தன் கன்னங்கள் கண்ட, அவனை விழிகளால் எச்சரித்து விட்டு, சொன்னாள் அலிஸ்.

"இல்லை! நீங்கள் அப்படிப் போனாள் நான் பயப்பட மாட்டேன்."

"ஏன்?"

"அப்படியே பஸ்ஸிலிருந்து குதித்து என் உயிரைப் போக்கி விடுவேன்."

அப்படி அலிஸ் சொல்லும்போது அவளுடைய கண்கள் கலங்கி வந்தன.

"பைத்தியம்! பைத்தியம்! நீ ஒரு வேளை என்னை மறந்து போனால், என்ர உயிர் நிச்சயமாக என்னிடத்திலிருக்காது. அதுதானே ஏற்கனவே உன்னட்டைக் கொடுத்திட்டேனே இனி எனக்கு ஏது உயிர்?"

"எனக்கு மட்டும் என்னவாம், உங்களட்டை இருக்கிறதே என்னுடைய உயிர்."

அலிஸ் கிண்டல் செய்தாள். "அதைக் கொண்டு வாழலாந்தானே!"

"அலிஸ்" அவன் அவளை கம்மிய குரலால் அழைத்தபடி அவள் முகத்தை ஒரு முறை உற்றுப் பார்த்தான்.

பஸ்ஸில் இருந்தவர்கள் சீட்டுடன் மோதி, மோதி நித்திரை செய்து கொண்டிருந்தனர். பஸ் அநுராதபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

எட்வேர்ட் கூறினான்.

"என்னை நம்பி நீ என்று என்னுடன் உறவு கொண்டாயோ, அன்று முதல் நீ இல்லாமல் நான் இல்லை என்று முடிவு கட்டி விட்டேன். இன்னும் கேள்" அவனை வியப்போடு பார்த்த அலிஸை அன்போடு பார்த்து சிரித்து விட்டு தொடர்ந்தான் எட்வேர்ட்.

"இன்றைக்கு நான் செய்கிறது உண்மையிலேயே எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு விஷயம் சரியில்லை எண்டால், அதை எல்லாருமே செய்யாமல் விட்டால் பிறகு குற்றுறவாளிகளே இந்த உலகத்திலை இருக்க மாட்டாங்கள். நாங்கள் ஒருத்தரை யொருத்தர் விரும்புறம் எண்டு, எங்களை யாராவது சேர்ந்து வைப்பார்களா? உன்னை நம்பி இலவம் மரம் மாதிரி வளர்த்தார்கள் உன் பெற்றோர்கள், பெண்ணை நம்பி இருக்கலாமா?"

"என்னை நீங்கள் நம்பவில்லையா?"

"அதில்லை அலிஸ்! பெண் இலவம் பழம் போன்றவள் பஞ்சாக ஒரு நாள் புறப்பட்டு விடுவாள். பெண் பிறப்பதே ஆசைக்காகத்தான். ஆணை நம்பித்தான். அப்பிடி நம்பிப் பிறந்த ஒரு பெண்ணைக் கைவிட்டால் அது எவ்வளவு துரோகம்! எவ்வளவு பாவம்! அம்மா – அது தான் என்னைப் பெத்தவ ? அவ போனதும் நான் தனியேயிருந்து பட்ட பாடு... ஆண்டவருக்கு வெளிச்சம். பெண் பராமரிக்கும் கடவுள். காலைத் தேநீர் முதல் இரவுச் சாப்பாடு வரை தோயல் முதல் குளியல் வரை இன்பம் முதல் மரணம் வரை எனக்கு ஒரு பெண் துணை வேண்டும். அது யாராக இருந்தாலென்ன? என்னை மனதார நேசிக்கிற, உளமாரப் பராமரிக்கிற ஒருத்தி! அவ தாயாக இருந்தாலென்ன? தாரமாக இருந்தாலென்ன? எனக்குத் தாயில்லை. இப்பொழுது நீ ஆண்டவர் சத்தியமாக என் மனைவி. என் அன்புச் சத்தியமாக என் தாய்..." அவனுடைய குரல் ஏனோ கம்மியது.

அலிஸின் கண்களிலிருந்து தெறித்த கண்ணீர்த் துளிகள் அவளது எம்பிய மார்பில் விழுந்து தெறித்தன.

"அழாதே!" அவன் அவளைத் தேற்றிய படி, தான் அழுதான்.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது.!

அயலவர்கள் தூங்கிக் கொண்டே விழுந்தார்கள்.

அவன் தொடர்ந்தான்.

"இப்ப போறம் திருகோணமலையிலிருக்கின்ற என் அக்கா வீட்டை. அவவும் அத்தானும் நிச்சயமாக எங்களை வரவேற்பினம். அக்கா அடிக்கடி உன்னைப் பற்றிக் கேட்டு எழுதுறவ. அவவுக்கு நீ அழகியாக மட்டுமல்ல, நல்ல குணசாலி என்றும் அபிப்பிராயமிருக்குது. நானும் ஏதோ ஒரு பெண்ணைக் காப்பாத்துகிற அளவுக்கு உழைக்கிறன். ஓ! அந்த அக்காவுககு உழைத்துக் கலியாணமுஞ் செய்து வைச்சவன், நகை நட்டு தேடிப் போட்டவன் நான் தான். உன்னைக் காப்பாற்ற என்னால் முடியும். நேரத்துக்கேற்ற வேலை செய்வன். மேசன் வேலையா, கார் றிப்பயரா? சைக்கிள் றிப்பயரா? ஹம்! இவ்வளத்துக்கும் எஸ். எஸ். ஸி வேற பாஸ்..."

"எல்லாம் எனக்குத் தெரியும் தானே?"

"பல விஷயங்கள் தெரிந்திருக்கும். அவை புரியாமல் இருக்கலாமல்லவா?"

அநுராதபுரம் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த அந்த பஸ், பெருமளவு பிரயாணிகள் இறங்கியதும், புதிய சிலரை ஏற்றிக் கொண்டு மறுபடியும் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

அவனும் தொடர்ந்தான்.

"அலிஸ்! நீ ஒண்டும் சாப்பிடவில்லையே. எனக்கு அதை நினைக்க நெஞ்சு வலிக்குது."

"எனக்குப் பசிக்கயில்லை. நீங்கள் ஏதாவது சொல்லிக் கொண்டேயிருங்கள். அறிஞர்களிலும் பார்க்க, அநுபவஸ்தர்களின் சொல்லில் ஆழமிருக்கும்."

"ஓ! அப்பிடியா?" சிரித்தான் எட்வேர்ட்

"உம்!"

"சொல்லுறன், இப்ப உங்க அம்மா அப்பா என்ன செய்வினம்?"

"அ...ம்...மா!..." அலிஸ் தாயை நினைத்து, அச்சங் கலந்த விழிகளோடு பிதுங்கத் தொடங்கினாள்.

"தயவு செய்து என்னைக் குழப்பாதீங்க அத்தான்! நீங்கள் ஒண்டுமே பேச வேண்டாம்."

அலிஸ் மன்றாடினாள்.

அவர்கள் மௌனிகளாயினர்.

விடிந்தது! – உலகத்துக்கு!

"ஐயோ! ராசாத்தி! நீ என்ன செய்யிறையோ? எங்கை இருக்கிறியோ?" மகளைப் பிரிந்த துயரம் – இல்லை இன்னமும் மகள் வரவில்லையே என்ற ஏக்கம் அவளுடைய மனதைக் குடைந்தது.

தோமஸுக்கு அழுகையே வந்த விடும் போலிருந்தது. அவனும் அழுதால் அவளைத் தேற்றுபவர் யார்?

"அழாதை அன்னா! அலிசுக்கு ஒண்டும் வந்து விடாது அவள் பள்ளிக்கூடத்திலை தான் நிற்கிறாள் நான் சொல்லுறன் கேள்! அன்னா! அவள் காலமைக்கும் நிண்டு பின்னேரம் போல வந்து விடுவாள்."

தோமஸ் தேற்ற முயன்றான். உண்மையிலேயே அலிசுக்கு என்ன நடந்திருக்குமோ? என்று நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது. அந்தப் பயத்தை நொந்து நொடித்த அன்னாவுக்கு வெளியிட்டால், அவள் அதைத் தாங்க மாட்டாளே என்று எண்ணி, அதை மறைத்தான் தோமஸ்.

அன்னாவைத் தேற்ற அவன் உசும்பியதால் காலிற் பட்டிருந்த காயம் சுண்டி வலியெடுத்தது. அதைவிட மகளைப் பிரிந்தது வேகமாக வலித்தது. நெருப்பாகச் சுட்டது. புண்ணிலே காரம் இட்டது போன்ற எரிவு உள்ளம் உடல் எல்லாம் காணப்பட்டது. ஒருவரை மற்றவர் தேற்ற முடியாமல் ஆறுதல் வார்த்தைகள் கிடைக்காமல் கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டேயிருந்தனர்.

ஊர் கூடி விட்டது!

"என்ரை பிள்ளை சொன்னாள் எல்லாம்! இந்த நாளைப் பெட்டையளை எப்பிடி நம்புறது. படிக்க வைச்சவுடனை அவளவையள் படுகிற பாடு!...." தமக்கு அருகில் நின்றவரைப் பார்த்துக் கூறினார் ஒருவர்.

"இத்தினை கஷ்டங்களுக்கை தோமஸ் அந்தப் பெடிச்சியை என்ன மாதிரியெல்லாம் வளர்த்தான். பாவம்! அவள் என்னடா எண்டால் போனவள் ஒரே போக்காப் போயிட்டாள்." என்றார் அடுத்தவர்.

திண்ணையிற் கிடந்த தோமஸின் காதுகளில் கூரையே பெயர்ந்து விழுந்த நினைப்பு உண்டாகியது. மண்டையிற் பலங்கொண்ட மட்டும் அடித்த அடி!

"அப்பிடியும் இருக்குமா? சே! என்ரை அலிஸ் அப்பிடிச் செய்ய மாட்டாள். நாங்கள் படுகிற கயிட்டத்தைப் பார்த்த பிறகும் அவளுக்கு அந்த எண்ணம் உண்டாயிருக்காது... இவங்களுக்கு ஊர்வம்பு அளக்கத்தான் தெரியுமோ?"

"டோய்! கூத்திமோனே! என்னடா சொன்ன நீ! என்ரை பிள்ளை அப்படிப்பட்டதோடா?" - சிறிக் கொண்டே எழுப்போனான் தோமஸ். முடியவில்லை. அப்படியே இருந்து விட்டான்.

"உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் வலிக்குதோ?" - முன்பு குரல் கொடுத்தவனே கூறினான்.

"ம்!" என்றபடியே ஒரு கையை ஊன்றி எழும்பினான். வாசற்படியோடு அமைந்து காணப்பட்ட நிலையையும் அவனால் பற்றிக் கொள்ள முடியவில்லை. "தடாலெ"ன்று மண்ணிலே வீழ்ந்தான் தோமஸ். அவனுடைய காற் புண்ணிலிருந்து இரத்தம் பீறிட்டுக் பாயத்தொடங்கியது.

"ஆ...ண்...ட...வ...ரே!" என்று ஓடிவந்து, கணவனை வாரியெடுத்து, நிறத்தி விட்ட அன்னா முற்றத்திலே நின்று கொண்டிருந்த மனித ஜடங்களைப் பார்த்துக் கூறினாள் அவளுடைய கன்கள் கோபக்கனலை உமிழ்ந்து கொண்டிருந்தன.

"உங்களுக்கு வேறை வேலையில்லையோ? எங்கடை பிள்ளை எப்பிடியாவது போகட்டுமே!... பெத்தவங்கள் நாங்கள்!

வளர்த்தவங்களும் நாங்கள்! அவள் அப்பிடிப் போயிட்டாள் எண்டால் எங்களுக்குத்தான் கவலை. நீங்க வாயை மூடிக் கொண்டு போங்க...."

நேரம் ஓடியது!

தபாற்காரன் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

அதனைப் பிரித்து வாசிக்கத் தலைப்பட்டான் தோமஸ். அவனை இடைமறித்து "யாருடையது?" என்று ஆவலோடு கேட்டாள் அன்னா.

"உன்ரை மகளின்றை போலையிருக்கு!"

விபரம் ஒரளவு விளங்கி விட்ட தோமஸினுடைய கரங்கள் கடிதத்துடன் நடுங்கின. நெற்றி நரம்புகள் தெரிந்தன. அவன் படித்தான். ? கண்களால்!

"அன்புள்ள ஐயா அம்மாவுக்கு!"

உங்களை விட்டுப் பிரிந்து எங்கேயோ போகிறேன். எனக்கு வாழ்க்கையில் ஒருவர் குறுக்கிட்டு விட்டார். அவருடன் உங்களை யாவரையும் மறந்து போகிறேன். என் தம்பியைக் கூட நினைவில் இருத்த முடியாமலேயே போகிறேன்....

ஊருடன் வந்திருப்பதானால் ஊர் எங்களைச் சும்மா விடாது. ஒருவரை நம்பி மானத்தோடு கூடி வாழ்ந்தாலும் வசைப்பாடும் கெட்ட உலகம் இது. உங்களுக்கு அவமானத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை. கண்காணாத இடத்துக்குப் போகிறேன்.

அன்புள்ள
அலிஸ்

"மோசக்காறி"

தோமஸ் அலறினான்.

அவன் எண்ணிய எண்ணங்கள், கட்டிய மனக் கோட்டைகள் அத்தனையும் சிறுபிள்ளை மண் வீடாகி விட்டன என்பதை அது எடுத்துக் கூறியது. கற்பனை உலகில் சஞ்சரித்த தோமஸ். இறக்கை ஒடிந்த பறவை போலத் துடிதுடித்துப் பதைத்தான்.

"என்ன? என்ன எழுதியிருக்கிறாள்?"

அன்னாவினுடைய அந்தக் கேள்விகளிலே ஒருவித அவசரம்.

"ஆரோடையோ போறாளாம்."

"ஐ...ய்...யோ!"

இழவு விழுந்த வீடு போல மாறியது தோமஸின் வீடு. தோமசைப் பார்க்க வந்து போனவர்களுக்கு அலிஸின் செய்தி அவல் போலக் கிடைத்தது.

ஊரெல்லாம் இதே பேச்சு!

அவற்றை அன்னாவோ தோமஸோ பொருட் படுத்தவில்லை. நம்பிக்கையில், அன்பில், பாசத்தில் விழுந்த இடி, அவற்றின் சுவடு தெரியாமலேயே அழிந்து விட்டது.

இனி....?

அவர்களைப் பொறுத்தமட்டில் அலிஸ் இறந்து விட்டவள் தான்!

# 8

திருகோணமலையில் பெருந்தெருவில் உள்ள எட்வேர்ட்டின் அக்கா வீட்டில் பிள்ளைகள் சகிதம் அலிஸின் கல்யாணம் நடந்தேறியது.

அவள் சொன்னாள்:

"இண்டைக்கெண்டு நல்ல நாளாக இருந்ததோடை சுவாமியாரும் கோயிலில் இருந்தது தான் பெரிய ஆச்சரியம். உங்களடைய கல்யாணத்தை தேவனும் ஆதரிக்கிறார் எண்டு தானே சொல்ல வேணும்."

எட்வேர்ட்டின் அக்காவான ஸ்டெலா மிக்க ஆனந்தத் தோடு கூறினாள்.

அலிஸ் கவிழ்ந்த தலை நிமிராது, மண்ணைப் பார்த்துச் சிரித்தாள்.

எட்வேர்ட் மௌனியாக இருந்தான். அவன் கண்கள் மட்டும் சிரித்துக் கொண்டது. கோயிலில் சுவாமி முன்னிலையில் தனது தாலிக்கொடியை அப்படியே கழற்றி அவன் கையில் கொடுத்தது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

"அத்தான் தான் குடுக்கச் சொன்னார் தம்பி!" என்று அவன் மறுத்த பொழுது அவள் கூறியது நினைவுக்கு வந்தது.

அவர்களுக்கு முன்பாக அமர்ந்து அங்கு நடப்பவற்றைக் கம்பீரமாக இரசித்துக் கொண்டிருந்த அத்தானை ஒருமுறை எட்வேர்ட் பார்த்தான்.

அந்தத் தாலிக்கொடியையே அத்தானின் பெயரால் செய்து கொடுத்தவன் எட்வேட் என்பதால், அதனை அவனுக்கு வேண்டிய இந்த வேளையில் அவனுக்கே அன்பளிப்பாக, நன்றியுணர்வோடு கொடுத்திருந்த அத்தானை மறுபடியும் பார்த்தான் அவன்.

"என்ன எட்வேர்ட்! மனம் சரியில்லை போலை கிடக்கு!"

சாய்மனையை விட்டு எழுந்து, தம்பதிகளின் அருகில் வந்து அமர்ந்த அவனுடைய அத்தான் டேவிட் கேட்டான்.

"இல்லை அத்தான்! ஆனால் நீங்கள் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. மோதிரம் மாத்தியிருக்கிறோமே, அது போதாதா?"

"எட்வேர்ட்! நீ எத்தனையோ விதத்தில் என்னை விட உயர்ந்தவன். உன்னுடைய உள்ளம் இருக்கே அது எல்லாத்தையும் விட பெரிசு. ஆனால், அனுபவம் இருந்தும் இல்லாதவன் மாதிரி பேசுறியே அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அலிசின்ரை ஆக்கள் சரி, எங்கள் ஆக்கள் சரி இந்தத் தாலிக்கொடியைக் கொண்டுதான் உன்னை மதிப்பினம். காதலிச்சுக் கலியாணஞ் செய்யிறவங்களை ஊராரும் உற்றாரும் கொஞ்சம் அதிகமாகக் கவனிப்பினம்." என்று கூறி விட்டு, ஸ்டெலாவைப் பார்த்தான் டேவிட்.

அவள் தன் கணவன் சொல்லப் போவதை ஆவலோடு கேட்கத் துடிப்பது போல இருந்தாள்.

டேவிட் சொன்னான்:

"புதுக் காதல் ஜோடி என்ன உடுக்குது ? என்ன சாப்பிடுது ? என்கிறதிலையிருந்து அடிபடுகினமா? பிடிபடுகினமா? என்கிறது வரை ஆராய்வினம்."

டேவிட் சொல்லி முடிப்பதற்குள் எட்வேர்ட் குறுக்கிட்டு, "இதைச் சொல்லாதீங்க அத்தான். எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் காதலிச்சுத்தான் முடிச்சவர். சைவக்காரர். அந்த இரண்டு பேரும் பட்டதாரியள். அவர் ஒரு பத்திரிகாசிரியர். அவவோ அரசாங்கத்திலை பெரிய உத்தியோகம், இவ்வளத்துக்கும் அந்தப் புண்ணியவதி மஞ்சள் கயித்தோடை... மூண்டு முடிச்சோடை தான் போய்வாறா. அவையும் உள்ளன்போடு வாழுகினம் தானே?"

"வாழ்க்கைக்கும் மனதுக்கும் தான் சம்பந்தமிருக்குது. ஆனால் சமூகம் அவர்களைச் சும்மா விட்டிருக்க மாட்டுதே!" டேவிட் கேட்டான்.

"அவர் என்னைக் கொண்டு தான் தன்னுடைய கார் திருத்துறவர். அப்ப ஒரு நாள் அந்த அம்மாவும் வந்தா. மஞ்சள் கயித்தைக் கழுத்திலை கண்டிட்டு, அவரிடம் கேட்டன். அதுக்கு அவர் சொன்னார், இன்பம், துன்பம், மரணம் இந்த மூன்றுக்கும் போட்ட மூன்று முடிச்சுக் கயிறு அது. மூன்று முடிச்சைத் தங்கத்திலே போட ஏலாது. அத்தோடை தங்கக் கொடிகள் எத்தினை அடைவு கடையில் வாழ்கின்றன. இன்னமெத்தினை விலைப்பட்டுப் போகின்றன. தாலியோடையே கொடிகள் திருட்டுப் போகின்றன. ஒத்தி அறுக்கப்படுகின்றன. இது எல்லாத்துக்கும் புனிதமும் பாதுகாப்பும் நிறைந்தது மஞ்சள் கயிறும், தாலியுந்தான் எண்டு சொல்லிச் சிரிச்சார் அவர். நான் ஒண்டும் பேசயில்லை."

"ஏன்?"

"உண்மை பரிசுத்தமானது. அவர் உள்ளதைத் தானே சொன்னார்." எட்வோட் அழுத்தமாகப் பேசினான்.

டேவிட் சற்றே குத்தலாகக் கூறினான். "அந்தப் பேப்பர்காரருக்கு தாலிக்கொடி வாங்க வழியில்லையாக்கும். தெரிஞ்ச தமிழிலே சளாப்பியிருக்கிறார்."

"இல்லை அத்தான்! கார் வாங்க வழியிருந்ததே! எத்தனையோ பேருக்கு எவ்வளவு உதவியிருக்கிறார் தெரியுமா?"

"அப்பிடியா?"

"உம்!"

"அப்படியானால் இந்த ஆள் ஒரு சாதிப் பயித்தியமாக இருக்கவேணும்."

"எல்லாருமே ஒரு விதத்தில் பைத்தியந்தான். சிலருக்கு பொன்னில் பைத்தியம், வேறு சிலருக்கு மண்ணில், இன்னும் சிலருக்குப் பெண்ணில்.... அவர் போல ஆளுக்கு இலட்சியத்தில் ....இப்பிடியிப்பிடி எத்தனையோ?"

"சரி...சரி!... சாப்பிட வாருங்கள்.!"

அவர்களின் பேச்சை ஆவலோடு கேட்டிருந்த ஸ்டெலா, சாப்பாட்டுக்கு அழைத்தாள்.

"எது எப்பிடியோ? அது அப்பிடியே நடக்கும். நடக்கட்டும்.... அலிஸ் எழும்பு நேரமாகி விட்டது சாப்பிடுவம்." என்றபடி எழுந்தான் எட்வேர்ட்.

அவனைத் தொடர்ந்து அனைவரும் போயினர்.

# 9

நாட்கள் நகர்ந்து கொண்டேயிருந்தன.

தோமஸ் கட்டோடு கடந்தான். காயம் ஆறிக்கொண்டு போகவில்லை. பதிலாக முழந்தாள் வரை வீங்கியது. தொட்ட இடமெல்லாம் வலி என்று கூறுமளவிற்கு அவனுடைய உடல் நலங் கெட்டிருந்தது.

அன்னா இரண்டு உயிர்களுக்கு உணவு போடுவதற்காக அலைந்தாள். அலைந்து கொண்டேயிருந்தாள்.

கடன் கேட்கப் போகும் இடங்களில் கணவனுடைய பரிதாபகரமான நிலையையும், மகளுடைய மானங் கெட்ட செயலையும் எல்லோரும் சுட்டிப் பேசுவார்கள். அந்த அவச் சொற்களைத் தாங்க மாட்டாமல் ஓடி வருவாள் அன்னா. கஷ்டப்படுபவளைக் கண்டு கலங்குபவர்கள் போல எல்லோரும் நடித்தனர். ஆனால் ஒருவராவது உதவி செய்ய முன் வரவில்லை.

இரக்கமின்மையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு விட்ட மக்களுக்கு விவிலியமும் எடுபடாது என்பது அன்னாவுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

பட்டினி கிடக்கும் நேர அளவு இப்பொழுது நீண்டு நாள் அளவு வரை வந்தது. கோயில் தர்மம் ஒன்றமே கிடைக்கவில்லை. வாங்கத் தெரிந்தவர்களுக்குக் கொடுக்கத் தெரிவதில்லையே!

ஓ! கடவுளும் வாங்கத் தான் இருக்கிறாரா?

கண்ணீர் பெருக உடல் உருகியதே தவிர, அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஒரு வேளைச் சோற்றுக்குக் கூடப் பஞ்சம். பெரும் வறுமை, மானம் ஒன்றிற்காக இரந்து கேட்பதையும் வெறுத்தாள் அன்னா.

தனக்காக அன்னா படும் கடுந் துயரைத் தோமஸினால் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய மகனுக்கும், தனக்கும் எதுவித பேதமும் இல்லை என்றே அவன் எண்ணிப் புழுங்கினான்.

"அவளை நம்பி எப்படியெல்லாம் செய்தேன்? அவளாலை எத்தினை செலவு? நன்றி கெட்டவள் அன்னாவைப் படாத பாடு படுத்திப் போட்டன். நான் பாவி கறுமி...."

வெதும்பினான்.

காலில் தானே காயம் பட்டது. ஆண்டவரின் கிருபையாலே நெஞ்சுரத்துக்கு ஒரு குறைவில்லையே. நான் மறுபடியும் உழைக்க வேணும். உழைக்க வேணும்...உழைக்க....!

நினைவுகள் கிலுகிலுத்தன.

அன்னா வெளியே சென்று விட்டு அப்பொழுது தான் அங்கு வந்தாள். மத்தியானமே எங்கோ போயிருந்தவளின் சிவந்த முகத்தில் கரிக்கோடுகள் படர்ந்திருந்தன. அலுத்துக் களைக்க வேலை செய்வதால் ஏற்படும் வியர்வைக் கோடுகள் போன்று அவை காணப்பட்டன.

"அன்னா"

தோமஸ் அழைத்தான்.

கையிலிருந்த பொட்டலங்களை வீட்டுத் திண்ணையில் வைத்து விட்டு, "கொஞ்சம் பொறுங்கள் இதோ வந்திட்டன்!" என்றபடி கிணற்றுப்பக்கமாகப் போய், முகத்தைக் கழுவினாள்.

கயர்ப்பான அந்தக் கிணற்று நீர் முகத்தில் பட்டதும் எரிவு உண்டாகியது. அண்டி, சிவந்திருந்த கைகள் வெடிமருந்து பட்டாற் போல் மசமசத்தன. விரல்களின் அடியில் உள்ளங் கையின் மேலாகச் சுருங்கியிருந்த தோல் படலங்கள் வேதனையைக் கொடுத்தன.

முகத்தைக் கழுவி, தனது முந்தானைச் சேலையால் துடைத்தபடி, "கூப்பிட்டீங்களே!" என்றாள் அன்னா.

எங்கோ வெறித்துப் பார்த்திருந்த தோமஸ், "எங்கே போன நீ" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டான்.

இருந்திருந்து அவனுக்கு வரும் கோபத்தின் தன்மையை நன்கு உணர்ந்திருந்த அன்னா "ஏன் அப்பிடிக் கோவிச்சுப் பாக்கிறியள்? சும்மா பாருங்களேன்... இஞ்சேருங்கோ.. என்ரை கடவுள் எல்லே...." என்று குழைந்தாள்.

திண்ணைத் தூணுடன் முதுகு சாய்த்து, வீட்டுப் புறமாகக் கால்களை நீட்டியிருந்த தோமஸின் பக்கத்தில் வந்து அமர்ந்த அன்னா, புண்பட்ட அவனுடைய காலை மெல்ல வருடியபடி, "நான்...நான்..." என்று திக்கினாள்.

"என்ன சொல்லப்போறே? இதென்ன சாமான்கள்...." தோமஸ் கவலை தோய்ந்த வெறுப்போடு, மென்னையைப் பிதுக்கியபடி கேட்டான்.

"இது அமெரிக்கன் மா, இரண்டு றாத்தல். அது சீனி.... மற்றது தேங்காய்..." அவள் சொல்லி முடிப்பதற்குள் "தேங்காய்! தேங்காய் எண்டு தெரியாமல் தான் இருக்கிறன் இதெல்லாம் ஏது?"

"..........."

"கடன் வாங்கினியா?"

"இல்லை!"

"அப்ப?"

"உழைச்சு வாங்கின நான்!"

"உழைச்சு!" என்று கறுவிக் கொண்டே பலங்கொண்ட மட்டும் அவளை எற்றி விட்டான் தோமஸ்.

திண்ணையில் அலமலக்காக உருண்ட அன்னா. மறுபடியும் எழுந்தோடி வந்து அவனுடைய இரண்டு கால்களையும் இருந்து பிடித்தபடி "ஐயா...ஐயா!... கோவிக்காதீங்க..... கடன் படுறதிலும் இது பறுவாயில்லை எண்டு நினைச்சன். கனகசபாபதியின்ரை மகளட்டை போனன். அவள் படிப்பிக்கிறாளெல்லே. அரிசி இடிக்க நேரமில்லையெண்டு இடிச்சுத் தரச் சொன்னாள். நானும் இடிச்சன். ஒண்டரை ரூபா கொடுத்தாள். அது தான்...அது தான்....."

அன்னா கண்கள் கலங்க, நெஞ்சம் வெதும்பக் கூறினாள்.

தோமஸ் அழுதான். தனக்கு ஏற்பட்ட முறிவை எண்ணி, யாரையோ பழி வாங்குபவன் போல, வாசல் நிலையோடு மண்டையை மோதினான்.

"ஐயோ! ஆண்டவரே! உங்களை ஏன் வதைக்கிறீங்கள்? உங்களுக்குக் கோபம் என்டால் என்னை அடியுங்கள்."

அழுதழுது மன்றாடினாள் அன்னா!

"என்னை அடியுங்கள், மண்டை வலிக்கப் போகுதே ஐயோ! கல்யாணம் முடிச்சு இவ்வளவு வருஷத்துக்கு உங்களட்டை ஒரு நாளாவது அடிவாங்கயில்லை. நீங்க ஒரு குறையும் வைக்கயில்லை. அடிக்காத குறையை ஏன் வைக்கறீங்க" என்றபடி பாய்ந்தெழுந்து, வாசல் நிலைக்கும் அவனுடைய தலைக்கும் இடையில் தன் கையை வைத்து, அவனுடைய தலையை வாரி இழுத்து, மார்போடு அணைத்துக் கொண்டாள் அன்னா.

அவன் விட்டெறிந்த மூச்சு அவளுடைய மார்பகங்களைப் பொசுக்கி விடுவன போன்றிருந்தது. தோமஸ் ஒருவாறு தன்னைச் சமாளிததபடி, அவளிடமிருந்து விடுவித்துக் கொண்டு கூறினான்.

"நான் உனக்குச் சோறு போடக் கடமைப் பட்டவன். உழைச்சதெல்லாம் உன்ரை மோள் திண்டாள். இனியாவது உனக்குத் தாறன். எடுத்தண்டுவா கோடியிக்கை கிடக்கிற பறியை, மண்டா கடலுக்கை போயிட்டுது. கம்பியையும் எடுத்தா. துண்டில் எங்கே? எல்லாம் கொண்டு வா!"

அன்னா பிரமை பிடித்தவள் போலப் பேசாது அவனையே பார்த்தவண்ணம் அவனருகில் இருந்தாள்.

"உனக்குச் சொல்லுறதென்ன?" பத்து வீடுகளுக்குக் கேட்கும் படி தன் பலங்கொண்ட மட்டும் கத்தினான் தோமஸ்.

"கடலுக்குப் போறீங்களா?"

அன்னா இமை வெட்டாது மெல்லக் கேட்டாள்.

"உம்...உம்.. போகத்தான் போறன். ஒரேயடியாக...."

"ஆங்!" என்ற அழுகைமுனகலுடன் அவனுடைய வாயைப் பொத்தினாள் அன்னா.

"அப்படிச் சொல்லாதீங்க உங்களாலை தான் நான் இன்னும் உயிரோடை இருக்கிறன். இல்லை... எப்பவோ செத்திருப்பன். மறந்திடாதையுங்கோ!"

சிறுபிள்ளைபோல விக்கி விக்கி, விம்மி விம்மி அழுதாள் அன்னா.

"உம்! கொண்டுவா!"

"போகாதீங்க! காயம் ஆறட்டும். அதுக்குப் பிறகு எங்கையெண்டான்ன போங்கள்."

அவள் கெஞ்சினாள்!

அன்னாவை வெறுப்போடும் கோபத்துடனும் பார்த்து விட்டு, ஒரு காலை இழுத்து, இழுத்து நடந்து சென்று தூண்டிலிடுவதற்கு வேண்டிவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறினான் தோமஸ்.

வாசலண்டை சென்றவன், பெரும் சிரமத்துடன் திண்ணையிலேறி, அதில் விரித்த பாயில் தூங்கிக் கொண்டிருந்த ஜேக்கப்பை முத்தமிட்டான். வெறிபிடித்தவன் போன்று ஜேக்கப்பை அணைத்த தோமசை, நித்திரை கலைந்த ஜேக்கப்பும் கொஞ்சி விட்டான். அவனுடைய பிஞ்சு இதழ்களினூடே பல் முத்துக்கள் சிந்தித் தெறித்தன. அதை வெகுவாக அநுபவித்த

தோமஸ், சிறிது சிரித்தான். ஆயினும் கண்கள் அப்பொழுதும் கலங்கியிருந்தன.

அன்னாவின் விசும்பல் மெல்ல மெல்ல அவன் செவிகளி லிருந்து மறைந்தது.

பரந்து காணப்பட்ட கருங்கடலைத் தஞ்சமென்று, ஒரு காலை ஊன்றி நடந்து கொண்டிருந்தான் தோமஸ். முழந்தாள் வரை வீக்கம் இருந்ததால் கெந்தி ஆறுதலாக நடக்க அவனால் முடியவில்லை.

கையிலிருந்த பறி அலாக்காக ஆட கம்பியால் தரையை ஊன்றி, ஊன்றி நடந்தான் தோமஸ்.

கடற்கரையை அடைந்து விட்டான் தோமஸ். அவனுடைய குத்தகை வள்ளம் எசமானைக்கண்டு தலையை ஆட்டும் எருது போல் அசைந்தது.

ஒரு காலில் கெந்தி, கெந்தி, கெந்திச் சென்று தோணிக்குள் ஏறினான்.

"ஆண்டவர் நம்மை எண்டைக்கும் கைவிட மாட்டார்."

கையிலே இருந்த பெரிய தூண்டிலை ஒரு முறை பார்த்து பெருமூச் செறிந்தான். பின்னர் அவசராவசரமாகக் கண்கடைகளில் வழிந்து வந்த கண்ணீர்த் துளிகளை ஒற்றி எறிந்து விட்டு, கூசுகின்ற விழிகளை வானத்திலிருத்தி புன் முறுவல் செய்தான்.

தோணி நகர்ந்தது!

வள்ளத்தின் நடுவே போட்டிருந்த மரத்தின் மேல் இரு புறமுங் கால்களைத் தொங்கவிட்டு இளைப்பாறியவாறே தாங்கு கோலை எடுத்து மெதுவாக வலித்துக் கொண்டிருந்தான அவன். வலியிழந்த கால் சுண்டியிழுத்தது. அதை மரத்தின் நீளம் நீட்டி, தோணி விழிம்புடன் சாய்த்தபடி தொடர்ந்து வலித்தான் தோமஸ்.

நடுக்கடலை நோக்கி மெல்லப் போய்க்கொடிருந்தான் அவன்.

நிலவு வழமைப்போல் வரவில்லை. இப்பொழுது முன்னிருட்டாகியிருந்தது. வானத்தில் படிந்திருந்த செம்மை மெல்ல மறையத் தொடங்கி, உலகமே அந்தகாரத்தில் மூழ்கத் தயாராகிக்கொண்டிருந்தது.

மேற்கு வானில் ஒளிப்பிம்பம் கரையோரமாக ஓங்கி நின்ற தென்னோலைகளின் அசைப்பைத் தோமஸுக்குத் தெளிவாகக் காட்டின. அவை போய்க் கொண்டிருந்த அவனுக்கு சொல்ல மறந்ததொரு சேதியைச் சொல்லி அனுப்ப அழைத்துக் கொண்டிருந்தன.

அன்று கடைசியாக அவன் களங் கட்டி வலை பார்க்கச் சென்ற பொழுது, அவனுக்குச் சாப்பாடு தண்ணீர் எல்லாம் கொண்டு வந்த அன்னா இன்று கண்ணீரை மட்டும் அனுப்பியிருந்தாள் என்று அவன் எண்ணினான். சாப்பாடு சமைப்பதற்கே ஒன்றும் இல்லாத போது, கட்டிக் கொடுக்க என்ன இருக்கிறது? என்று அவன் ஏளனமாக எண்ணிப்பார்த்தான்.

பின், அந்த ஆகாயப் பெருவெளியை ஒரு முறை அண்ணாந்து பார்த்துக்கொண்டான். வானம் வெளேரென்று இருந்தது. பார்க்குமிடமெலாம் நட்சத்திரக் குவியல்கள்

தென்பட்டன. ஊர்மனை அவனுடைய வாழ்க்கை போலவே இருண்டு காணப்பட்டது.

பெருங்கடல் வெண்திரைகளைப் பரப்பி அபாயக் குரல் ஒலிப்பது போல ஒலித்துக் கொண்டேயிருந்தது. அலைகள் தோணியைப் பலமாக வந்து எதிர்த்தன.

"இன்டைக்கு எப்படியும் மீன் கிடைக்கும். தூண்டிலுக்கு அம்பிடாத மீன் எங்கே போகப்போகுது. ஒரு இருபது றாத்தல் மீன் என்டாலும் பிடிக்கிறது தான். காத்துக் கிளம்பினபடியால், புதைச்ச வலையிலும் மீன் பட்டிருக்கும். இரண்டு கிழமையாகக் கடலிலை கிடக்குது வலை. எதுக்கும் எல்லாத்தையும் பார்த்து விட்டால் போச்சு!"

"மீன்களை வழியிலே குடுத்திடவேணும். ஒரு முப்பது முப்பத்தைஞ்சு ரூவாச் சேரும். அன்னாட்டைக் கொண்டு போய் இந்தா உனக்கு வேண்டியதை வாங்கு என்டு எறிய வேணும். அப்பிடியே ஜேக்கப்புக்கு இனிப்பு, விசுக்கோத்தும் போகமிக்கை மறந்திடாமல் வாங்கிக் கொண்டு போக வேணும். மாதாவே கைகொடுத்திடுங்கள். உங்கள் பாலன் அம்மா! கேக்கிறேன். எனக்கு இந்தச் சங்கடங்களிலையிருந்து மீட்சி தாருங்கள்."

தோமஸ் நினைவின் கனவுகளில் நீந்திக் கொண்டிருந்தான். தான் மாதாவின் பாலன் என்றதும், தனக்குப் பாலனாகப் பிறந்த ஜேக்கப்பின் நினைவு அவனை வருடியது. அதோடு, அன்னாவை என்றுமில்லாதவாறு இன்று வெறுப்பும், கோபமும் காட்டி விட்டு வந்ததை நினைக்கையில் நெஞ்சு கனத்தது. தோமஸ் கடலுக்கோ, தூரப் பயணமோ செல்லும் பொழுது, வளர்ந்த பெண்ணாகிய அலிஸ் வீட்டிலிருந்தாலும், ஏதும் சாக்குப் போக்குச் சொல்லி அன்னாவை உள் வீட்டுக்குள் அழைத்து,

பிள்ளைகளுக்குத் தெரியாமல் அவளின் செக்கச் சிவந்த கன்னங்களில் முத்திய பின்னரே விடை கேட்பான். அவளும் அதனை எதிர்பார்த்திருந்தவள் போன்ற ஆனந்தத்துடன் அவனுடைய தாடைகளை இரண்டு கைகளாலும் பற்றி வருடி மெய்மறந்து, வருடிய விரல்களை "இச்" சென்று ஒலியெழும்ப கொஞ்சி மகிழ்வாள்.

இன்றோ–?

"மிருகத்தனமாக அவளைத் தள்ளிப் போட்டன்."

வீட்டுக்குப் போய் அன்னாவைத் தேற்றிவிட்டு, அவளுடைய ஆனந்த பலத்துடன் திரும்பி வருவோமா என்றும் தோமஸ் நினைத்தான். பின்னர் "சே!" என்று தனக்குள் சொல்லி, தன்னையே எள்ளி நகைத்தான் அவன்.

"அவள் படுக்கின்ற கயிட்டத்தைப் பார்த்துக்கொண்டு நான் சும்மா இருக்கவா? அந்தக் குழந்தை... என்ரை ஒரே செல்வம் பசியாலை எப்பிடித் துடிச்சிட்டான்..."

கடந்தவற்றை நினைத்தபடி சிறிது தூரம் கடந்து விட்டான் தோமஸ். அவன் சேர வேண்டிய இடமும் வந்து சேர்ந்தது.

தூண்டிலை சரி செய்து இரையையும் இட்டுக் கடலிலே வீசினான் தோமஸ். "லபக்" என்ற சிறு ஒலி அந்த பேரிரைச்சலில் அமிழ்ந்தது.

"ஊஹூம்!"

தோமஸ் முயற்சியைக் கைவிடவில்லை. அவனை அறியாமலே அவனிடம் புதிய தெம்பு, உற்சாகம் எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

இரண்டாம் முறையும் தூண்டில் கடலில் வீழ்ந்தது.

பயனில்லை!

மூன்றாம் முறை!

இல்லவே இல்லை!!

"உம்!" – அவனுடைய நாசித் துவாரங்களைப் பிய்த்தெறிந்து கொண்டு பெருமூச்சுப் புறப்பட்டு, அந்த பரந்த கடற்காற்றுடன் கலந்தது.

தோல்வி மேல் தோல்வி கண்டு விட்ட தோமஸினால் மேலும் பொறுக்க முடியவில்லை. தோணியின் ஆட்டமும் அவனைத் தொழிற்படவிடவில்லை. நெஞ்சின் அளவுக்கும் மேலாக இருக்கக்கூடிய நீரில் இறங்குவதென்பதும் முடியாத காரியம். அந்தக் கும்மிருட்டில் புட்டி பள்ளமே தெரியாது ஆர்க்கு வேறு வாயைப் பிளந்திருக்கும். கால் பட்டாலே "சதக்" கென்று வெட்டி விடும். அது அவ்வளவு விஷமாக இல்லாது விட்டாலும் வேதனை வேதனை தான் இருக்கிற கொஞ்ச மிச்சப் பலமும் போய் விடும்.

என்னதான் செய்வது?

தோமஸ் சற்றுப் பொறுத்தான்.

காலையில் அன்னா அவனுக்கு வாங்கிக் கொடுத்த பீடிகளில் மீதம் மடியில் வைத்தவாறே இருந்தன. அவற்றுள் ஒன்றைத் துளாவி எடுத்துப் பற்றிக் கொண்டான் அவன்.

புகை தந்த இன்பத்தில் என்ன செய்வது? எப்படிச் செய்வது? என்று மூளையைக் குழப்பியபடி இருந்தான் அவன்.

"ஆண்டவரே! நான் செய்த செபங்கள் எல்லாம் வீணாகிப் போச்சா? என்ரை அன்னாவையும் ஜேக்கப்பையும் காப்பாத்த மாட்டீங்களா? அதுகளைப் பசியாலை வாட்டி, அதுகள் படும் அவஸ்த்தையை என் கண்ணாலை பார்க்கச் செய்மிறியளா? க...ர்..த்..த...ரே! செபமாலை மாதாவே!"

தோமஸின் அதரங்கள் முணுமுணுத்தன. நெஞ்சம் கடலைப் போலவே கொந்தளித்துக் கொண்டிருந்தது. கண்கள் பனித்தன. அவனுடைய வலது கரம் அகல விரிந்து தூண்டிலைத் தூர எறிந்தது.

"அதென்ன?"

"ஏதோ இழுக்கிற மாதிரி இருக்கே?"

"ஒரு வேளை!.....? கல்லிலே பொறுத்திருக்குமோ?"

தண்ணீரிற் பெருஞ் சத்தங் கேட்டது. பெரிய மீன் ஒன்று வாலைச் சுழற்றி நீரைக் கலக்கியது. உருக்கி வார்த்த வெள்ளிபோல கடல் நீர் ஓடியது.

"பெரிய முறுகம்! கர்த்தர் கருணை காட்டிப்போட்டார்!" வாய்விட்டு சொல்லி மகிழ்ந்தான் தோமஸ்.

உவகை பூத்த மனத்துடன் பலமாக அந்தத் தூண்டில் நாரைப் பற்றி இழுக்கத் தொடங்கினான்.

தோமஸ் களைத்து விட்டான்! மீன் செய்த கொடுமைகளை அவனாற் பொறுக்க முடியவில்லை. கால்களை நோவும் பார்க்காது பின்னி இணைத்தபடி, பலமாக இழுத்தான்.

மீனும் வந்தது!

"அன்னா ஆ!......"

"ஜே...க்...க...ப்!"

இருட்டின் பயங்கரத்தை மிகப்படுத்திய வண்ணம் தோமஸின் அழைப்பு எங்கும் எதிரொலித்தது.

வருவது போல வந்த மீன், திடீரென திரும்பி ஓடியது. பலவீனமாகத் தூண்டில் நாரைப்பற்றியிருந்த அவனைத் தூண்டில் நார் பலமாகச் சுற்றியிருந்ததை அவன் உணரவில்லை.

இருட்டிலே தூண்டில் போடத் துணிந்து விட்ட தோமஸுக்கு எது தான் புரியும்?

# 10

காலையிலே கடலுக்குச் சென்று மீண்டவர்கள் கூறிய செய்தி கேட்டு அன்னாவினுடைய நெஞ்சமே வெடித்து விட்டது.

"ஐ...ய்...யோ!"

அதனைப் பிரதிபலிப்பது போலப் பேய்க் கூச்சல் போட்டாள் அன்னா.

ஜேக்கப்பை வாரியெடுத்தபடி கடற்கரையை நோக்கி ஓடினாள் அவள். எத்தனை பேர் பிரிந்தாலும், பிறந்த செல்வமாவது உருவ அமைப்போடு இருந்தாலாவது கிளையை நம்பி அவளால் வாழமுடியும்.

ஆனால்!

ஜேக்கப்! எதுவுமே செய்ய முடியாத அன்புச் சிறுவன். அன்பைத் தவிர அவனால் அன்னாவுக்கு எதையுமே கொடுக்க முடியாது. பால் வடியும் பிஞ்சுக் கரங்களால் அவளுடைய கண்ணீரைத் துடைத்துக் கன்னங்களைத் தடவிக் கொடுக்க முடிந்ததே தவிர தேற்ற முடியவில்லை.

"ம்...மா! அ...ஆ!"

"என்ரை ராசா! ஐயா!...ஐயா போயிட்டாரடா! நம்மளைத் தனிய விட்டிட்டுப் போயிட்டார்! ரா சா....!"

அவனைப் பார்த்து அவள் அழுதாள்.

அவளைப்பார்த்து அவன் அழுதான். இருவருமே அழுது, அழுது, அழுது ஓ! செத்துக் கொண்டிருந்தனர்.

அன்னாவினுடைய வாழ்வு இருண்டது போல உலகமும் இருண்டு கிடக்கிறது. அந்தக் கண் மயக்கும் இருளிலே அன்னா அலறிக் கொண்டே ஓடுகிறாள்.

ஜேக்கப் அவளடைய இடுப்பிலேயே இருக்கிறான்.

"நம்மடை கதை இப்பிடியா போக வேணும் ஜே...க்...க...ப் ராசா! அக்கா எங்கையோ எவனோடையோ ஓடிப்போயிட்டாள் ஐயா!... ஐ...ய்...யோ!"

எதை எதையோ எல்லாம் கூறித் தேறலாமென்று வந்த அன்னா நீர்மையற்றுப்போன நாவால் "ஓ!" என்று அழுகிறாள்.

"ஆண்டவரே! என்ரை தெய்வம் எங்கே?"

அந்த அபலையின் தீனக்குரல் எங்கும் எதிரொலிக்கிறது. பழைய ஆஸ்பத்திரிக் கட்டிடம், கண்ணகை அம்மன் கோயில் அந்தப் பகுதி வீடுகள் எல்லாவற்றிலும் எங்கே? எங்கே? எங்கே? என்ற எதிரொலி கேட்கவே செய்கிறது.

கடலிலே செல்லும் தோணிகளை அபிநயம் பிடித்துப் பறந்து காட்டும் கடற் காகங்கள் விரண்டு கத்திக் கொண்டே உயரப்பறக்கின்றன. தென்னை வட்டுக்களிலே கூடு கட்டி வாழும் காகக் கூட்டங்கள் கலைந்து செம்பியம் வளவு முழுவதுமே அலைந்து திரிகின்றன. அவற்றின் பயங்கலந்த கரைவினால் ஊர்மனையும் உறக்கத்திலிருந்து விழிக்கவே செய்கிறது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கோட்டான்களும் வீரிட்டு அலறுகின்றன.

"எங்கே? செபமாலை மாதாவே! தோணியை மட்டு கரைக்கு அனுப்பி என்ரை தேவனை என்ன செய்தீங்கள்?"

இந்தக் கேள்வி அயலிற் குடியிருந்த எல்லோருடை காதுகளிலும் ஒலிக்கத்தான் செய்கிறது.

அவளைத் தேற்ற ஒருவரும் முன்வரவில்லை. ஆறு அறிவற் சீவன்கள் காட்டும் பரிவைத்தானும் அந்த மனித இன காட்டவில்லை. பறவையினங்களைப் போலவே அவர்களுப் அவளை விட்டு நெடுந்துரம் போய்கொண்டிருக்கின்றனர்.

"ஜேக்கப்..என்ரை...அப்பு... ராசா!"

"ஹ ஹ் ஹா! அந்தா! தோணி! என்ரை மன்னர்....."

அதோ! "இந்த ஜென்மத்திலே உன்னை அநுபவிக்காமல் நான் சாகமாட்டன்" என்ற முத்துமாணிக்கனும் அவளைக் கண்டு விரண்டு ஒடுகின்றான். அவள் உடலுக்கு ஏது குறைவு?

ஊரே ஒடுகின்றதே! ஏன்?

அன்னா அழுகின்றாள்!


அன்னா சிரிக்கின்றாள்!

அவளுடன் சேர்ந்து அழவும் சிரிக்கவும் அவளுக்கு இந்தப் பாழும் உலகில் ஒரேயொரு உயிர் மட்டும் இருக்கின்றது.

அது -?

ஜேக்கப் தான்!

அவளைப் "பைத்தியக்காரி" என்று சொல்லாதவனும் அவனே தான்! ■



ISBN - 955 - 21 - 1059 - 9
47461

Rs. 130/-